24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 24
விலை - 30ரூபா

சுடர் 34 கதிர் 259 ஆடி 30 ஆம் நாள் வியாழக்கிழமை 15 ஒகஸ்ட் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## கடந்த ஆட்சியாளர்களுக்கு வாக்களித்தால் காட்டு யுகம்



### வவுனியாவில் வைத்து ரணில் இப்படி முழக்கம்

**வவுனியா, ஒகஸ்ட் 15**

**கடந்த ஆட்சியாளர்களுக்கு வாக்களித்தால் அது காட்டு யுகத்துக்கே மக்களை மீண்டும் கொண்டு சென்று விடும். இவ்வாறு தெரிவித்தார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.**

21

## என்ன குற்றம் செய்தனர் ராஜபக்ச குடும்பத்தினர்?

### எம்மை விமர்சிப்பதை உடன் நிறுத்துங்கள் என்று கோருகின்றார் கோத்தபாய ராஜபக்ச

**கொழும்பு, ஒகஸ்ட் 15**

**தமிழ்ப் பயங்கரவாதிகளின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை மீட்டெடுத்தது ராஜபக்ச குடும்பம். அப்படிப்பட்ட ராஜபக்ச குடும்பத்தினரை குற்றவாளிகள் என்று அரசியல்வாதிகள் சிலர் கண்டபடி விமர்சிக்கின்றார்கள்.**

**நாம் உண்மையில் என்ன குற்றம் செய்தோம்? எம்மை விமர்சிப்பதை உடன் நிறுத்துமாறு, குறித்த அரசியல்வாதிகளிடம் வேண்டிக்கொள்கின்றேன் - இவ்வாறு அச்சுறுத்தல் பாணியில் எச்சரிக்கை விடுத்துள்ளார் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ச.**

21

## எத்தனை விகாரைகளுக்குச் சென்றாலும் கோத்தாவுக்கு மன்னிப்புக் கிடைக்காது

### போட்டுத் தாக்குகின்றார் அமைச்சர் ராஜித



கொழும்பு, ஓக. 15

'சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் வேட்பாளராக ராஜபக்ச அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து, அவர் பௌத்த விகாரைகள் மற்றும் இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றார். எத்தனை விகாரைகள், ஆலயங்கள் ஏறி இறங்கினாலும் அவர் செய்த பாவங்களுக்கு ஒருபோதும் மன்னிப்புக் கிடையாது. ஏதோவொரு விதத்தில் அவருக்குத் தண்டனை கிடைத்தே தீரும். இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

21

## ஐ.தே.க. தலைமையிலான புதிய கூட்டணி குறித்து சனியன்று இறுதி முடிவு

கொழும்பு, ஓக. 15

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் மலரவுள்ள புதிய அரசியல் கூட்டணி (ஜனநாயக தேசிய முன்னணி) தொடர்பில் எதிர்வரும் சனிக்கிழமை இறுதி முடிவெடுக்கப்படும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

அத்துடன், கூட்டணியை நாட்டு மக்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் திகதியும் அன்றைய தினம் நிர்ணயிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஐக்கிய தேசிய முன்னணியில்

21

## காலத் தேவையின் அடிப்படையில் கோத்தாவின் தெரிவு பொருத்தமானதாம்!

கொழும்பு, ஓக. 15

காலத்தின் தேவையின் அடிப்படையில் பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச தெரிவுசெய்யப்பட்டுள்ளமை பொருத்தமானது என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவரும், அந்தக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர்களின் ஒருவர் என்று கருதப்படுபவருமான சரத் பொன்சேகா.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற

21

## தமிழர்கள் பிரச்சினையை தீர்க்க பொதுவாக்கெடுப்பு

### அமைச்சர் நவீன் கருத்துப்பகிர்வு

முல்லைத்தீவு, ஓக. 15

தமிழர்களின் பிரச்சினை தொடர்பாக சிங்கள மக்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்தி, அவர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார் அமைச்சர் நவீன் திஸநாயக்க.

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத்

21

## ஈஸ்டர் தாக்குதல் விவகாரம் அடுத்த வாரப்பகுதியில் மைத்திரிக்கு அழைப்பு

### நான்கு திகதிகளும் பரிந்துரை

கொழும்பு, ஓக. 15

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அரச தலைவரை விசாரணைக்காக அழைத்துள்ளது. இது தொடர்பான கடிதம் அரச தலைவர் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்று நாடாளுமன்றத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

குறித்த கடிதத்தில் நான்கு திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்படி 20, 21, 22 மற்றும் 23ஆம் திகதிகளில் ஏதாவது ஒரு தினத்தில் அரச தலைவர் தெரிவுக்குழுவின் முன்னால் முன்னிலையாக வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெரிவுக்குழுவில் கடந்த வாரம் தலைமை அமைச்சர் ரணில் சாட்சியமளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலமொன்று நேற்று மீட்பு

கொடிகாமம், ஓக. 15

தணங்களப்பு வீதி, கிறிஸ்தவ சேமக்காலையில், ஆள்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது. உள்ளாடையுடன் நிலத்தில் சம்மட்டி போட்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

சடலத்துக்கு

21

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைத் தவிர்த்த ரணில்

யாழ்ப்பாணம், ஓக. 15

வவுனியாவில் நேற்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்திப்பதைத் தவிர்த்து மாற்றுவழியால் கட்டடம் திறக்கும் நிகழ்வுக்கு தலைமை அமைச்சர் ரணில் சென்றார். இது போராட்டக் காரர்களுக்கு கடும் ஏமாற்றத்தைக் கொடுத்தது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 907 நாள்களாக வவுனியா ஏ-9 வீதியில்

21



## மடு அன்னைக்கு இன்று திருவிழா

மன்னார், ஓக. 15

இலங்கையில் உள்ள புகழ்பெற்ற கத்தோலிக்க யாத்திரைத் தலமான மன்னார் மடு அன்னைக்கு இன்று திருவிழா முன்னெடுக்கப்படுகிறது. திருவிழாத் திருப்பலி இன்று காலை 6.16 மணிக்கு ஒப்புக்கொடுக்கப் படவுள்ளது.

**(தொடர்புடைய செய்தி 14)**

## கட்டுத்துவக்கு வெடித்து ஒருவர் இறப்பு

வவுனியா, ஓக. 15

செட்டிகுளம் அரசடிக்குளம் பகுதியில்

21

## பெரும்பான்மை உள்ளவரே அரச தலைவர் வேட்பாளர்

### ஐ.தே.க தவிசாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

பெரும்பான்மை ஆதரவு உள்ளவரே அரச தலைவர் தேர்தலுக்கான, எமது வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான கபீர் ஹாசிம்.

கொழும்பு ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கட்சியின் ஏகமனதான நிலைப்பாடுகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் நிலைப்பாட்டை புறக்கணித்து மாற்று அணியை உருவாக்க இடமளிக்க முடியாது - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாசவே ஐ.தே.கவின் அரச தலைவர் வேட்பாளராகக் களமிறக்கப்பட வேண்டும் என்று ஐ.தே.கவுக்

21

# மீன் தொட்டியும் அதிர்ஷ்டமும்

மீன் தொட்டிகளை வீட்டில் வைப்பது அதிர்ஷ்டம் கொட்டும் ஒன்றாகக் கருதப்படுகிறது. சொல்லப்போனால் வாஸ்து சாஸ்திரத்தின் படி, இதனை வீட்டில் சரியான இடத்தில் வைப்பதன் மூலம், மன அழுத்தத்தைக் குறைக்கலாம்.

மேலும் பலருக்கும் வீட்டில் மீன்களை வளர்ப்பதற்குப் பிரியம் இருக்கும்.

உங்கள் வீட்டில் மீன் தொட்டியை வைத்திருந்தால், ஒருசிலவற்றைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். இல்லாவிட்டால், அது வீட்டில் துரதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்து, வீட்டில் வறுமையை அதிகரிக்கும்.

வீட்டில் எப்போதும் மீன் தொட்டியைச் சமையலறையில் அல்லது படுக்கை அறையில் வைத்திருக்கக்கூடாது. இதனால் வீட்டில் பண இழப்பு தான் ஏற்படும்.

வீட்டில் மீன் தொட்டியை கிழக்கு, வடக்கு அல்லது வடகிழக்கு திசைகளில் வைப்பதே மிகவும் சிறந்தது. வாஸ்துவின் படி, இப்படி வைப்பதால், குடும்பத்தினரிடையே அன்பு அதிகரிக்கும்.

மீன் தொட்டியில் குறைந்தது 9 மீன்கள் இருக்க வேண்டும். அதிக பட்சமாக எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கலாம்.

மீன் தொட்டியில் உள்ள மீன்களின் நிறமும் முக்கியமாகும். அதில் 8 மீன்கள் சிவப்பு, ஒரேஞ்சு அல்லது தங்க நிறங்களிலும், ஒரு மீன் கண்டிப்பாகக் கறுப்பு நிறத்திலும் இருக்க வேண்டும்.

மீன் தொட்டியில் கறுப்பு மீன் இருந்தால், அது வீட்டினுள் நுழையும் தீய சக்திகளை முற்றிலும் உறிஞ்சிவிடும். ஒருவேளை அந்த கறுப்பு மீன் இறந்துவிட்டால், அது வீட்டில் உள்ள அனைத்து கெட்ட சக்திகளையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டது என்று அர்த்தம்.

வீட்டினுள் நுழையும்போது, மீன் தொட்டி எப்போதும் இடது பக்கத்தில் இருப்பதே நல்லது. நன்கு ஆரோக்கியமாக, சுறுசுறுப்பாக மற்றும் சுட்டித்தனமாக இருக்கும் மீன்களை தொட்டியில் வளர்த்தால், அது வீட்டினுள் செல்வம் மற்றும் ஆரோக்கியத்தை அதிகரிக்கும்.

ஒருவேளை ஒரு மீன் இறந்துவிட்டால், அதை நீக்கிவிட்டு, அதே நிறத்தில் மற்றொரு மீனைத் தவறாமல் வாங்கி விட வேண்டும்.

மீன் தொட்டியை அவ்வப்போது சுத்தம் செய்து, சுகாதாரமா கப் பராமரிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

## யாழ்ப்பாணம் மாநகரசபை

**நவீன முறையில் புனரமைக்கப்பட்ட பொது மலசல கூடங்களை சுத்தம் செய்து பராமரிக்கும் சேவைஎ்ய குத்தகைக்கு வழுங்குவதற்கான**

**மீள்கேள்வி அறிவித்தல் -2019**

இதன் கீழ் குறிப்பிட்ட சுத்திகரிப்பு சேவையை 01.09.2019 - 31.08.2020 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழுங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்.மாநகர சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 1.000.00 (NBT, VAT நீங்கலாக)

கேள்விப் படிவம் விநியோகித்தல் - 15.08.2019 -28.08.2019
(மு.ப 9.00- பி.ப.3.00 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 28.08.2019 3.30 மணி வரை
கேள்வி திறத்தல் - 29.08.2019. 3.00 மணிக்கு

| விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|
| நவீன சந்தை கீழ்த்தளம் 04 **Set**<br>1. 14'-0" x 9' 6"<br>2. 09'-6" x 6' 0"<br>3. 20'-0" x 9'-6"<br>4. 20'-3" x 9'-6" | 10,000.00 | 500,000.00 |
| செங்குந்தா சந்தை கீழ்த்தளம் 01 **Set**<br>5. 34'-0" x 21' -0" | 10,000.00 | 100,000.00 |

மேலதிக விபரங்களை மாநகர சபையின் நானாவித இறைவரிப்பகுதியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**
**09.08.2019**

(C 32666) (14.17)

## மரண அறிவித்தல்



# திருமதி துரையம்மா பொன்னையா

பிறவுண் வீதி, கலட்டிச்சந்தியை பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி துரையம்மா பொன்னையா நேற்று (14.08.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு அன்னம் தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நித்திய ரஞ்சிதம் (கமலா) மற்றும் விமலன் (விக்ரர்), விக்கினேஸ்வரி (உஷா), அன்ரன், அருள்வதனி, விஜயசிங்கபாகு ஆகியோரின் பாசமிகு தாயாரும் கந்தசாமி, இராசரத்தினம், யசிந்தா, பிரபாவதி, காலஞ்சென்ற திருச்செல்வம் மற்றும் சுபாசினி ஆகியோரின் பாசமிகுமாமியாரும்விஜிதா, சுஜாதா, சிவமுரளி, அமலன், நிமலன், எஸ்தர், எட்வினா, கவிதா, சுவிதா, சுபீர்தர், சோபீதர், ஜெடிஸ், கஜன்சன், ஸ்ரானி, கிறிஸ்னி, சாருஜன், வர்ஷா, சுவேக்ஸன், விவேக்ஸன், டாளி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2019) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப .11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இராமநாதன் வீதி, கலட்டி**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

# சுப்பிரமணியம் சுரேஸ்குமார்



பண்டாரிக்குளம் நல்லூரைப் பிறப்பிடமாகவும் தாவளை, இயற்றாளை, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுரேஸ்குமார். 14.08.2019 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தவமணிதேவி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் நாகம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற செல்வநிதி மற்றும் தயாளன் (பண்டாரிக்குளம், நல்லூர்), கிரிசாந்தி (இத்தாலி), காலஞ்சென்றவர்களான சுதாகரன், சதீஸ்குமார் மற்றும் கேதீஸ்வரன் (பிரான்ஸ்), அமலகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் விஜயகுமாரியின் அன்புக்கணவரும் இலங்கைநாயகி, அம்பிகாவதி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1.00 மணியளவில் ஊற்றல் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**



பிறப்பு 21 . 08 . 1968

இறப்பு 10 . 08 . 2019

# பாலசுப்பிரமணியம் மனோகரன்
## (மோகன்)

யாழ். திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் மனோகரன் (மோகன்) 10.08.2019 சனிக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம் - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், பத்மநாதன் - புஸ்பலீலா (தெல்லிப்பளை) தம்பதிகளின் அன்பு மருமகனும், லோஜனாவின் (லோஜி- கனடா) அன்புக் கணவரும், ஜெனாகரன், கேளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் மகாதேவி (மலேசியா), காலஞ்சென்றவர்களான ரகுநாதன்,வசந்தகுமார், ஸ்ரீதரன் மற்றும் மகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், பிரதீபன் (யாழ். தினக்குரல்), நவதீபன் (றோகன்- ஜேர்மனி), சாந்தகுமாரி (சிறுப்பிட்டி), ரஞ்சன் (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொளளவும்.

(CS/27360)(11,17)

**தகவல்: சகோதரர்.**

மகேஸ்வரன் (சகோதரர்) Mobile : + 491629222358
மகாதேவி (சகோதரி) Mobile : +60107105736

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 04.07.2019 அன்று இறைபதமெய்திய
எமது குடும்ப விளக்கு

## அமரர் தபோதரன் தர்ஷன்
## (கண்ணா)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.08.2019) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிரியைகள் எதிர்வரும் (17.08.2019) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது மகனின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரடியாக அனுதாபம் தெரிவித்தவர்கள் மரணச்சடங்கில் பங்கேற்றவர்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்தவர்கள், பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சிலம்புப்புளியடி, சங்கானை.** (J 10371) (14.17) **குடும்பத்தினர்.**

SINGER

புத்தம்புதிய பொருட்களுக்கு

50% வரை

கழிவு

SINGER
யாழ்
FIESTA
ஓர் அற்புதமான அனுபவம்

2019 ஆகஸ்ட்

16 17 18

காலை 09.30 - இரவு 09.00 வரை

நுழைவு இலவசம்

யாழ்ப்பாணம்
வீரசிங்கம் மண்டபம்

SINGER


யாழ்ப்பாணம்
மயிலிட்டி
கடற்றொழில் துறைமுகத்தின்
முதலாம் கட்ட நிர்மாண நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு
மக்களிடம் கையளிக்கும்
வைபவம்
முழு முதலீடு
ரூ. மில்லியன்
395
கமத்தொழில், கிராமியபொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம்
மற்றும் கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்
கௌரவ பீ. ஹரிசன் அவர்களின்
அழைப்பின் பேரில்
கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்
கௌரவ திலிப் வெதஆராச்சி அவர்கள்
மற்றும்
யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
கௌரவ மாவை எஸ். சேனாதிராஜா அவர்கள்
மற்றும்
வடமாகாண ஆளுனர் கௌரவ கலாநிதி சுரேன் ராகவன்
ஆகியோர் உட்பட
வடமாகாணத்தின் கௌரவ அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள்
மற்றும் ஏனைய பொதுமக்களின் பிரதிநிதிகளின் கலந்துகொள்ளலுடன்
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
கௌரவ பிரதமமந்திரி - ரணில் விக்ரமசிங்க அவர்களின்
தலைமையில்
2019 ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி மு.ப. 9.00 மணிக்கு சுபநேரத்தில்
மயிலிட்டி கடற்றொழில் துறைமுக வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்.
இந்த வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு தங்களை கௌரவத்துடன் அழைக்கிறேன்.
கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசனம் மற்றும்
கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு

# கேள்வி அறிவித்தல்
# யாழ்ப்பாணம் மாநகர சபை - சபை நிதி 2019

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசிய போட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு.பொதுநிதி சுற்றறிக்கை. இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலை மனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.

04. தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468. 021 2222019) என்னும் முகவரியிலிருந்து 15.08.2019ம் திகதியில் இருந்து 29.08.2019ம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2.000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை. பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 30.08.2019ம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபால் மூலமாக அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்க மேல்மூலையில் வேலை விபரம் குறிப்பிடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு (15.11.2019வரை) செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணை வைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

09. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம். மாநகர சபை. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 23.08.2019 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.

10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்பு பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | JMC/WD/CF-PackageI/2019-115 | Improvement of Kalddey Methades Back Lane | 4.208 | 2 | C8/C7 | 43,000.00 | 13.12.2019 |
| | | Improvement of KKS Road Shanthi Press Front Lane | | | | | |
| | | Improvement of Ramanathan Cross Road (Front of University) | | | | | |
| | | Improvement of KKS Road, Thaddatheru Junction No 808 Road | | | | | |
| | | Improvement of Kumarasamy Road by Lane | | | | | |
| | | Improvement of Sanklee Veethy Cross Road | | | | | |
| | | Improvement Chetty Street 5th Lane | | | | | |
| | | Improvement of Mangos Veehty | | | | | |
| | | Improvement of Pandarakulam West Road (Balance work) | | | | | |
| | | Improvement of Saddanathar Cross Lane 2 | | | | | |
| 2 | JMC/WD/PackageII/2019-116 | Improvement of AP Lane | 7.134 | 2 | C7/C6 | 72,000.00 | 13.12.2019 |
| | | Improvement of Leppal Lane | | | | | |
| | | Improvement of Kaleefa Apthul Kathar Veethy (Concrete) Cross Lane | | | | | |
| | | Improvement of Kaleefa Apthul Kathar Veethy Cross Lane 2, 3 & 4 | | | | | |
| | | Improvement of Gnanavairavar Kovil Road | | | | | |
| | | Improvement of Kachceri East 1st Lane | | | | | |
| | | Improvement of Kachceri East 2nd Lane | | | | | |
| | | Improvement of Pancharatnam Lane (Kachcheri Nallur Sub lane) | | | | | |
| | | Improvement of KachcheryEast Side Road (Near Railway track) | | | | | |
| | | Improvement of Vepulananthar Veethy Sub lane | | | | | |
| | | Improvement of Sepanat Front Lane | | | | | |
| | | Improvement of Columbuthurai Cross Road | | | | | |
| | | Improvement of Columbuthurai 4th Cross Road | | | | | |
| | | Improvement of Muthejur Shanka Veethyq | | | | | |
| | | Improvement of Nedunkulam Pillayar Temple Front Lane | | | | | |
| 3 | JMC/WD/PackageIII/2019-117 | Improvement of Malarmagal Road By lanes | 6.499 | 2 | C7/C6 | 65,000.00 | 13.12.2019 |
| | | Improvement of Rajeswary Road by lanes | | | | | |
| | | Improvement of Thirumagal Community centre lane (Balance Work) | | | | | |
| | | Improvement of Kandy Road By Lane | | | | | |
| | | Improvement of Chandanamatha Front Lane by lanes at Pandyanthalvu | | | | | |
| | | Improvement of Murukan Kovil Road at Eachchamoddai Road | | | | | |
| | | Improvement of Punkankulam Road by lane | | | | | |
| | | Improvement of Nagarasa Veethy By lane | | | | | |
| | | Improvement of Kuruso Road by lanes at Chundikuli, Jaffna | | | | | |
| | | Improvement of Mathews Road by lane | | | | | |
| | | Improvement of Main street 408 by lane | | | | | |
| | | Construction of concrete road for Rajasingham Road by lane Thirunagar | | | | | |
| 4 | JMC/WD/PackageIV/2019-118 | Constrcution of concrete road for Mavunkamam, Kondady lanes | 6.203 | 2 | C7/C6 | 63,000.00 | 13.12.2019 |
| | | Improvement of St. Antony's Church near Lane Kurunagar | | | | | |
| | | Improvement of Ice Plant Road by lane | | | | | |
| | | Constrcution of Drainage for St.Jamres West Road, Bankshall street, Kurunagar | | | | | |
| | | Improvement of Central East 2nd Lane at Kurunagar | | | | | |
| | | Constrcution of concrete road for New Housing scheme Lane at Kurunagar | | | | | |
| | | Improvement of New Housing Scheme internal Road at Kurunagar | | | | | |
| 5 | JMC/WD/PackageV/2019-119 | Improvement of Kesavil Pillayar 1st Lane | 2.781 | 2 | C8/C7 | 28,000.00 | 13.12.2019 |
| | | Improvement of Kesavil Pillayar 2nd Lane | | | | | |
| | | Improvement of Murugamoorthy Road by lane | | | | | |
| | | Improvement of Selvamahal near Lane | | | | | |
| | | Improvement of Sooriyaweli Veethy | | | | | |
| 6 | JMC/WD/PackageVI/2019-120 | Improvement of Manyam Cross Road 1 Koddady, Jaffna | 3.380 | 2 | C8/C7 | 34,000.00 | 13.12.2019 |
| | | Improvement of Manyam Cross Road 2 Koddady, Jaffna | | | | | |
| | | Improvement of Koddady Namasivayam front lane | | | | | |
| | | Improvement of Kannathiddy lane Drainage work | | | | | |
| 7 | JMC/WD/PackageVII/2019-121 | Construction of Raised Platform with Interlock Paving at Kalviyankadu Shopping Complex | 5.265 | 2 | C7/C6 | 53,000.00 | 13.12.2019 |
| | | Improvement of Cheddiyar Thodda Sub Lane | | | | | |
| | | Improvement of Point Pedro Road sub lane | | | | | |
| | | Improvement of Railway West Road (J/97) | | | | | |
| | | Improvement of Kanthapurana Veethy | | | | | |
| | | Improvement of Thiruvalluvar Salai Sub lane | | | | | |
| | | Improvement of Stanley Road by lane | | | | | |
| 8 | JMC/WD/PackageVIII/2019-122 | Construction of Two Storied Community Center, Arukaalmadam, Jaffna | 4.208 | 2 | C8/C7 | 42,500.00 | 13.12.2019 |
| | | Improvement of Maruthady 3rd Lane, Jaffna | | | | | |
| | | Improvement of Hospital Road Drainage Hand Rail Work at Chundikuli | | | | | |
| | | Improvement of Concrete Road for Rakka lane sub lane | | | | | |
| 9 | JMC/WD/PackageIX/2019-123 | Construction of Arasady 5th sub lane concrete road work | 4.990 | 2 | C8/C7 | 50,000.00 | 13.12.2019 |
| | | Improvement of Arasady 2nd lane sub lane | | | | | |
| | | Improvement of Udaiyar Road Work | | | | | |
| | | Improvement of Palaly Road Cross lane (Kinattady lane) | | | | | |
| | | Improvement of Palam road 2nd sub lane | | | | | |
| | | Improvement of Gnanavairavar Kovil front side lane | | | | | |
| | | Improvement of Palaly Road Cross lane (GS Office lane) | | | | | |
| | | Improvement of Manaltharai Sub lane | | | | | |
| | | Improvement of Kalaimagal Road sub lane Road work | | | | | |
| | | Construction of Beach Pavement at Passaiyoor | | | | | |

**ஆணையாளர்,**
**பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர்**
**மாநகர சபை,யாழ்ப்பாணம்.**

(IN 10980)(14.17)

**14.08.2019**

# 19 ஆம் ஆண்டு நினைவலைகள்

"நீத்தல், வாழ்வின் முடிவு அல்ல; புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்."



அமரர்

## திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.)

தோற்றம் : 26.06.1941 மறைவு : 14.08.2000

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெல்வேலி.

குடும்பத்தினர்

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி 2019/2020 ஆண்டிற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிக்கு 2019/2020 ஆம் ஆண்டுக்களுக்கான காலப்பகுதிக்குரிய பொருட்கள் மற்றும் சேவைகலை வழங்குவதற்கு பதிவு செய்ய விரும்பும் வவுனியா மாவட்டத்திலுள்ள தரம் வாய்ந்த வழங்குநர்கள், உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்**


1. இவ் வழங்குநர்களை பதிவு செய்தலானது ஒரு வருடத்திற்கு மட்டும் செல்லுபடியாகும்.
2. பொதுவாக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து விலைமனு கோரப்படும். எனினும் ஏனையவர்களிடம் விலை மனு கோரும் உரிமை கொள்வனவுதாரருக்கு உண்டு.
3. விண்ணப்பங்களைப் பதிவு செய்தலானது முறையான தரப்படுத்தலுக்கும் மதிப்பீட்டிற்கும் உட்படுத் தப்பட்டே மேற்கொள்ளப்படும். பிழையான விபரங்கள் வழங்கப்பட்டிருப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. வியாபாரப் பதிவு செய்யப்பட்ட வியாபாரத் தன்மை அல்லது அதனுடன் தொடர்புள்ள பொருட்கள் சேவைகளுக்கு மட்டுமே வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள முடியும்.
5. விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. வவுனியா மாவட்டத்தில் குறைந்தது ஒரு இடத்திலேனும் தங்கள் நிறுவனத்தின் ஒரு கிளை/ ஒரு காட்சியறை/ முகவர்/ அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஆகியவற்றில் ஒன்றையேனும் வைத்திருத்தல் வேண்டும்.
7. வழங்குநர்களுக்கு பெறுகைக்கான முற்பணங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.
8. ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன் பதிவுக் கட்டணமும் தனித்தனியே செலுத்தப்பட வேண்டும்.
9. பதிவுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவத்துடன் வியாபாரப்பதிவுச் சான்றிதழின் பிரதி. வரிப்ப திவுச் சான்றிதழின் பிரதி இணைக்கப்பட்டு 2019.08.24 ஆந் திகதிக்கு முன்பாக : **பீடாதிபதி, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, பூந்தோட்டம், வவுனியா** எனும் முகவரியில் நேரடியாக சமர்பித்தல் வேண்டும்.
10. மீளளிக்கப்படாத வைப்பு பணத்திற்கான பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
11. முடிவுத் திகதிக்கு 2019.08.24 பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக் கப்படும்.
12. மேலதிக விளக்கங்களுக்கு 024 2222272 எனும் தொலைபேசி இலக்க மூலம் தொடர்புகொள்ள முடியும்.
13. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் விலை மனு கோரப்படும் போது அதனைக் கருத்தில் கொள்ளாது விட்டாலோ அல்லது உரிய காலத்தினுள் பொருளினை வழங்க அல்லது வேலையினை நிறைவு செய்யாது விட்டாலோ அல்லது வழங்கப்பட்ட மாதிரி அல்லது நிபந்தனைகளை ஒத்துப்போகாமல் விட்டாலோ அத்தகைய வழங்குநர்கள் எதிர்காலத்தில் விலை மனு கோரப்படும் போது கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.
14. பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பபடிவத்தினை காரணமெதனையும் முன்வைக்காது ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பீடாதிபதி அவர்களுக்கு உரிமை உண்டு.
15. மேற்படி பொருள்கள் சேவைகள் வழங்குநர்களாகப் பதிவு செய்வதற்கு மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக ரூபா 100/= ஐ செலுத்தி விண்ணப்படிவங்கயைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

| தொகுதி இல | பொருட்கள் / வேலைகள்/ சேவைகள் விபரம் |
|---|---|
| 1 | பிரதியெடுக்கும் இயந்திரங்கள் அச்சிடும் உபகரணங்கள் மற்றும் அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் (Toner, Ink ,Master Roll) |
| 2 | இலத்திரனியல் மின் உபகரணங்கள், மின்சாரப்பொருட்கள் மற்றும் நீர்க்குழாய் பொருத்தும் உபகரணங்கள் |
| 3 | தொலைத் தொடர்புக்கான சாதனங்கள் உள்ளகத் தொலைபேசி இணைப்புக்கள் மற்றும் கண்காணிப்பு கமராக்கள் |
| 4 | கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் |
| 5 | மெத்தைகள், தளபாடங்கள் வழங்குநர்கள் மற்றும் திருத்துனர்கள் |

பீடாதிபதி,
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

(CS00560/15/17)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 17.07.2019 இறைபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

## அமரர் செல்லத்துரை பரம்சோதி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.08.2019) வெள்ளிக் கிழமை அதிகாலை 5 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெறும். அதேநாளில் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கீரிமலை செல்வதற்கான வாகன ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதுடன் **இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.**

ஆதிகோயிலடி,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

(ANE 938)(01/57)

ஜெகன் - 076 242 0109/ பரன் - 076 013 9585

# மரண அறிவித்தல்



பிறப்பு 12 . 08 . 1984

இறப்பு 03 . 08 . 2019

## திருமதி தவநிதி சண்முகநாதன்

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் முன்னர் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது லண்டன் Wembley Alperton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவநிதி சண்முகநாதன் (பாலாவோடை, களபூமி, காரைநகர்) லண்டனில் கடந்த 03.08.2019 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு மற்றும் விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு வேலுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சண்முகநாதனின் அன்பு மனைவியும், நேசினி, நிரோஷன் ஆகியோரின் அன்புத் தாயும், தயாநிதியின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.08.2019) வியாழக்கிழமை (லண்டன் நேரம் 9.30 A.m - 12.P.m Hendon cementery & Crematorium Holders hill Rd, London, NW7 INB, UK) இறுதிக்கிரியைகள் இடம்பெற்று 12.30 p.m இற்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**527, பலாலி வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.**

தகவல்:
வேலுப்பிள்ளை குடும்பத்தினர்.
(மைத்துனர் வே. தனபாலசுந்தரம்)

(cs.27375)(13.17)

077 297 8388, 077 390 3255

# கழுதை மாமா

காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அதன் சேவகனாக நரி ஒன்று பணி புரிந்தது. ஒருநாள் சிங்கம் "நரியே! எனக்கு கழுதை ஒன்றைச் சாப்பிட வேண்டும் என்று நெடு நாள்க ளாக ஆசை. அதை உன்னால் நிறைவேற்ற முடியுமா?" என்று கேட்டது. "அரசே! என்ன அப்படிக்கேட்டு விட்டீர்கள்? என்னால் முடியாதது இந்த உலகத்தில் ஏதுமில்லை. விரைவில் ஒரு கழுதை யுடன் உங்களைச் சந்திக்கிறேன்" என்று சொல்லி விட்டு புறப்பட்டுச் சென்றது.

காட்டை விட்டு வெளியே வந்த நரி ஒரு கிராமப் பக்கம் சென்றது. அங்கே ஒரு பெண் கழுதை மேய்ந்து கொண்டிருப்பதைக் கண்டது. நரி கழுதையின் பக்கம் சென்றது. "கழுதை அக்கா... நான் உன் னைத்தான் தேடிக்கொண்டு வந்தேன். "கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல நீயே எதிரே வந்து விட்டாய்" என்று நடித்தது. "என்னை ஏன் தேடினாய்?" என்று கேட்டது கழுதை. "கழுதை அக்கா காட்டுக்குள் கழுதை மாமா ஒருவர் இருக்கிறார். அவர் திரு மணம் செய்து கொள்வதற்காக பெண் தேடிக்கொண்டிருக்கிறார். அதற்காகத்தான் நானும் தேடி வந் தேன்" என்றது நரி.

"காட்டுக்குள் எல்லாம் நான் வாழ்க்கைப்பட மாட்டேன்" என்று கழுதை தற்பெருமை பேசியது. நரி விடவில்லை. "கழுதை அக்கா! நான் எங்கெல்லாமோ பெண் தேடி விட்டேன். உன்னைப் போன்ற அழகான கழுதையைப் பார்க்கவில்லை. அதனால் தான் சொல்கிறேன்" என்றது.

கழுதையின் முகம் நாணத்தால் சிவந்து போனது. "இன்னும் என்ன யோசனை? கழுதை அக்கா புறப்படுங்கள்" என்றது நரி. கழுதையும்நரியின்ஆசைவார்த்தைகளுக்கு மயங்கி புறப்பட் டது.இரண்டும் காட்டுக்குள் நுழைந்து சிங்கத்தின் குகையை அடைந் தன. நரி வெளியே நின்று கொண்டே "கழுதை மாமா...நான் உங்களிடம் சொன்னபடி கழுதை அக்காவை அழைத்து வந்துவிட்டேன். உள்ளே அனுப்பி வைக்கி றேன்" என்றது.

நரியின் தந்திரத்தை சிங்கமும் புரிந்து கொண்டது. தன்குரலை மாற்றிக்கொண்டு "அனுப்பு அனுப்பு"என்றது.

பெண் கழுதை நாணத்துடன் தலையைக் குனிந்தபடியே குகைக்குள் சென்றது. உள் ளேய ருந்த சிங்கத்துக்குப் பொறுக்க வில்லை. விரைந்து கழுதையின் மீது பாய்ந் தது. ஏதோ எச்சரிக்கை உணர்வால் கழுதை படாரென்று விலகிக் கொண்டது. குகையை விட்டு வெளியே ஓடித் தப்பிக்கவும் செய்தது. சிங்கம் ஏமாற்றத்துடன் வெளியே வந்தது. "அரசே! ஏன் அவ சரப்பட்டீர்கள். எத்தனை கஷ்டப்பட்டு அந்தப் பெண் கழுதையை அழைத்து வந்தேன் தெரியுமா?" என்று அலுத்துக்கொண்டது நரி. "கழுதையைப் பார்த்ததும் அதனை உண்ண வேண்டும் என்ற ஆவல் அதிகமாகிவிட்டது. அதனால் தான் பாய்ந்து விட்டேன். என் குறி தப்பிவிட் டது" என்று பரிதாபமாகச் சொன்னது சிங் கம்.

நரி யோசித்தது.

"சரி அரசே! கவலை வேண்டாம். சற்றே பொறுங்கள் நான் அந்தக் கழுதையை மீண் டும் அழைத்து வருகின்றேன்"என்றது.

சிங்கம் ஆச்சரியப்பட்டது.

"நரியே! என்ன சொல்கிறாய்! மீண்டும் மீண் டும் அந்தக் கழுதையையே அழைத்து வரு வாயா?" என்று கேட்டது. "ஆம் ! அரசே கவலை வேண்டாம். சற்றே பொறுங்கள். நான் அந்தக் கழுதையை மீண்டும் அழைத்து வருகிறேன்" என்றது. சிங்கம் ஆச்சரியப்பட்டது. "நரியே!என்ன சொல்கி றாய். மீண்டும் அந்தக் கழுதையையே அழைத்து வருவாயா?" என்று கேட்டது. "ஆம்! அரசே.." என்று கூறிவிட்டு சென்றது நரி.

கிராமத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்த கழு தையைத் தடுத்து நிறுத்தியது நரி. "நரியாரே! குகைக்குள் பயங்கரமான மிருகம் ஒன் றைப் பார்த்தேன். அதனால் தான் தப்பி ஓடி வந்தேன்"என்றது கழுதை.

"ஐயோ அக்கா! கழுதை மாமா தான் காட்டுக் குள்ளேயே இருப்பதால் அப்படி பருத்துப்போய் உள்ளார். நீஅதைப்பார்த்துமிரண்டு விட்டாய்" "நிஜமாகவா சொல்கிறாய்?" "ஆமாம் அக்கா அதோடு கழுதை மாமா இப்போது உன்னை நேரில் பார்த்து விட்டார் உன் அழகில் சொக்கி பைத்தியமாகிவிட்டார்" என்றது நரி.

நரியின் பேச்சில் மீண்டும் மயங்கி நரியின் பின்னாலேயே சென்றது.

குகைக்குள் சென்றதும் ஒரே அடியில் கழு தையை அடித்துக்கொன்றது சிங்கம். பிறகு நரியிடம் "நரியே கழுதையைப் பார்த்துக் கொள் நான் குளித்து விட்டு வருகிறேன்" என்று புறப்பட்டுச் சென்றது. இதுதான் சம யம் என்று நரி கழுதையின் மண்டையை உடைத்து மூளையை மட்டும் தின்றுவிட்டது. குளித்து முடித்து வந்த சிங்கமே கழுதையின் தலையில் மூளை இல்லாதது கண்டு சினந்தது. நரி கேட்டது! 'அரசே!மூளை இருந் திருந்தால் அந்தக் கழுதை மறுபடியும் வந்தி ருக்குமா?"என்று கேட்டது. சிங்கமும் அதற்கு ஒப்புக்கொண்டது.


## நல்லைக்கந்தனுக்கு

இன்று (15.08.2019) வியாழக்கிழமை
பத்தாம் திருவிழா
திருமஞ்சம்

செவ்வான உருவில் திகழ் வேலவன் அன்று
ஒவ்வாதது என உணர்வித் ததுதான்
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே

திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்
நடராசா கஜந்தன்
**நியூ மைதிலி ஜூவலர்ஸ்**
38,40, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 7878

## YOGIS
Institute of Beauty Therapy, Hair Dressing & Home Science (Pvt)Ltd

குறுகிய கால அழகுக்கலை பயிற்சிகள், கேக் ஐசிங் பயிற்சிகள் **புதிய வகுப்புக்கள் 17.08.2019** (சனிக்கிழமை) ஆரம்பமாகவுள்ளன.
சேரவிரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
மகளிருக்கான Gym Exercise நடைபெறுகின்றது.
**75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**077 716 4923/ 021 222 2796**

## தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

- காலம் : 18.08.2019
- நேரம் : காலை 9.30 மணிக்கு
- இடம் : சங்கப்பணிமனை
- விடயம் : மஹோற்சவ கால ஒழுங்குகள் தொடர்பாக

அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
இணைச்செயலாளர்கள்.
(cs.27372) (13.17)

கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 481 திகதி: 2019 ஆகஸ்ட் 13
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்
A 19 23 33 38
வாசி தூக 2 7 9 1 2
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.135,867,888/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 700
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.08.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 79,567,630/-
வெற்றி இலக்கங்கள் 01 08 30 50 I
விசேட வெற்றி இல. 7898
அபிவிருத்தி லொத்தர் சபை

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3222 திகதி: 2019.08.14 புதன்கிழமை
ஊதா
SATURDAY FORTUNE
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 01 28 29 63 H
போனஸ் இலக்கம்: 56
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்: 55,939,295/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
## உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 270
சீட்டிழுப்பு திகதி ▸ 14.08.2019 நீலம்

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| V | 17 34 69 | 09 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 42,378,712/=
16.08.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## மாபெரும் மலிவு விற்பனை

இந்தியாவில் இருந்து இறக்குமதியான லட்சுமி சுதா, சாண்டில்யன், சிவபாரதி, ஓஷோ, இந்திராசௌந்தர்ராஜன், கண்ணதாசன், கல்கி, ரமணிச்சந்திரன் , சுஜாதா, ராஜேஸ்குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், அமுதவல்லி கல்யாணசுந்தரம், காஞ்சனா ஜெயதிலகர், ஜெய்சக்தி, ஆர்.சுமதி ஆகியோரின் இனிமையான கதைகள் நிறைந்த புத்தகங்கள் இந்தியன் விலைப்படி 3.50 ஆல் பெருக்கப்பட்டு 10% தொடக்கம் 50% வரையான விசேட விலைக்கழிவுடன் வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
**இல.212,214, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ராசி அதிர்ஷ்டம்
திகதி 14.08.2019 வெற்றி வாரம் 2586 வர்ணம் பச்சை
விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 11 32 37 50
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3.140.862/=
டபள் சான்ஸ் விசேட இல.
ரூ.500 பரிசுக்காக 8207
ரூ.100 பரிசுக்காக 658
15.08.2019 ம் திகதி வியாழக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

## ஏல விற்பனை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி கொட்டலானது (Hotel) அதனது பாவனையில் இருந்த பொருள்களை ஏல விற்பனைக்கு ஏற்பாடு செய்துள்ளது.

- இடம் :- கபிலா கிறசர், கோண்டாவில் கிழக்கு (பஸ் டிப்போவிற்கு அருகில்)
- காலம் :- 17.08.2019, 18.08.2019 (சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை)
- பொருள்:- பாவனையில் இருந்த மரத்தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் வளிச்சீராக்கிகள் (AC)

ஏல விற்பனையில் பங்குபெற விரும்புபவர்கள் மேற்படி திகதிகளில் காலை 9.30 மணிக்கு மேற்குறித்த இடத்திற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். CS27385(16/17)
தொடர்புகளிற்கு:-077 217 1523, 077 343 8373

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




கடந்த 26.06.2019 பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் **சட்டமாணி பட்டம்** பெற்ற
செல்வி **றஞ்சனா நவரத்தினம்**
(மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர்)
அவர்கள் மேலும் பல சிறப்புக்கள் பெற்று புகழுடன் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: அத்தை குடும்பம்
(CS 27370)13,17)

## மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1983ல் பிறந்த **கனடா CITIZEN** மணமகனுக்கு நற்பண்புள்ள மணமகள் தேவை.
தொடர்பு:-077 644 6628

## காணி விற்பனைக்கு
**பிறவுண் றோட் கல்வாரி சேர்ச்சுக்கு அருகில் உள்ள லேனில் 5பரப்பு காணி விற்பனைக்கு.**
**076 702 3565**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# மிரட்டாதீர்கள் ரணில்!

கடந்த ஆட்சியாளர்களுக்கு வாக்களித்தால் மீண்டும் காட்டு யுகத்துக்கே செல்லவேண்டி வரும் என்று தமிழர்களை எச்சரித்திருக்கிறார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. வவுனியாவில் நேற்று நடந்த நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் அர்த்தம் கிட்டத்தட்ட தமிழ் மக்களை அவர் மிரட்டுகிறார் என்பதுதான். பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவருக்கு வாக்களிக்காதீர்கள் என்பதற்காகத்தான் அவர் இப்படிக் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்.

இது மட்டுமல்ல கோத்தபாய ராஜபக்ச கடந்த காலங்களில் மேற்கொண்ட பயங்கரங்கள் எல்லாம் அண்மைய சில நாள்களாக தலைமை அமைச்சருக்குத் திடீரென ஞாபகத்துக்கு வந்துள்ளன. அதுவும் கோத்தபாய ராஜபக்ச அரசதலைவர் வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்டதும் இவையெல்லாம் ஞாபத்துக்கு வந்துள்ளன.

அதிலும் குறிப்பாக ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமைக்காக கோத்தபாய ராஜபக்ச மன்னிப்புக் கேட்பாரா? என்று கேள்வி எழுப்பியிருந்தார் ரணில் விக்கிரமசிங்க. கடந்த 4 ஆண்டுகளாக கோத்தபாய உள்ளிட்ட போர்க்குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள படையினர் அனைவரையும் காப்பாற்றுவதற்குச் சேர்ந்து பணியாற்றி வரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோத்தபாயவின் படுகொலைகள் திடீரென ஞாபகத்துக்கு வருகின்றன என்றால் அதற்குத் தேர்தலைத் தவிர வேறு ஏதாவது காரணங்கள் இருக்க முடியுமா?

2015ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் அளித்த வாக்குறுதியில் ஒரு சிறு பகுதியைக்கூட நிறைவேற்றுவதற்கு முயற்சிக்காத ரணில் விக்கிரமசிங்கவுக்கு கோத்தபாயவின் படுகொலைகள் இப்போது ஞாபகத்துக்கு வந்திருப்பது ஏன் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்குத் தமிழ் மக்கள் முட்டாள்களல்லர். போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக, நியமிப்பதாக கூறப்பட்ட கலப்பு நீதிமன்றம் என்கிற வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்தது, பதவியில் இருந்த கூட்டு ஆட்சியும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும்தான் என்று ஐ.நா. மனித உரிமைகள் குழுவிற்குச் சாட்டுக்கூறி வந்த ரணில், கூட்டு ஆட்சி கலைந்து தனது தனிக் கட்சி ஆட்சி அமைந்த பின்னரும்கூட அதுபற்றி வாயே திறக்காமல் இருந்துவிட்டுத் திடீரெனப் படுகொலைகளைப்பற்றிப் பேசத் தொடங்கியிருக்கிறார் என்பதற்கு மீண்டும் தேர்தல் வருகிறது என்பதைத் தவிர வேறொரு காரணம் இருக்கவே முடியாது.

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா ரணிலின் இந்தக் கபட நோக்கத்தை பகிரங்கமாகவே தோலுரித்துக்காட்டியிருக்கிறார். தனது தந்தையின் கொலையை ரணில் இப்போது மீண்டும் உச்சரிக்கத் தொடங்கியிருக்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கும் அவர், கடந்த 4 ஆண்டுகளாகக் கோத்தபாயவைப் பாதுகாத்து வைத்திருந்தவர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று நேரடியாகவே குற்றஞ்சாட்டியிருக்கிறார். தலைமை அமைச்சர் இன்று கொலையாளி என்று வர்ணிக்கும் நபரை (கோத்தபாய) கடந்த 4 ஆண்டுகளாகப் பாதுகாத்து வந்தமைக்காக ரணில் மன்னிப்புக் கேட்பாரா என்றும் அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அகிம்சா மட்டுமல்ல ஒட்டுமொத்தத் தமிழர்களுமே அதே கேள்வியைத்தான் கேட்கிறார்கள். கோத்தபாய கொலையாளி என்பது இப்போதுதான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஞாபகத்துக்கு வந்ததா? தமிழர்களுக்கு நீதியை வழங்காமல் விட்டது மட்டுமல்ல, வாக்குறுதிகளை வழங்கித் தமிழர்களை ஏமாற்றிய தலைமை அமைச்சர், இப்போது கோத்தபாயவைக் காட்டித் தமிழ் மக்களை மிரட்டிப் பார்ப்பது சிறுபிள்ளைக்கு வேடிக்கை காட்டுவதைப் போன்று பரிதாபகரமாக இருக்கிறது.

தமிழர்கள் காட்டு யுகத்தை மட்டுமல்ல, காட்டுமிராண்டித்தனமான வன்முறைகளையும் இனக்கலவரங்களையும்கூடப் பார்த்தவர்கள். எனவே அவர்களுக்குக் கடந்த காலத்தைக் காட்டி மிரட்டுவது பயனளிக்கப்போவதில்லை. இந்த உலகத்தில் உள்ள எல்லாத் துயரங்களினது எல்லைகளையும் தமிழர்கள் ஏற்கனவே தொட்டு வந்துவிட்டார்கள். எனவே துன்பமும் துயரமும் அவர்களுக்குப் புதிதல்ல, நீங்கள் அவற்றைக் காட்டிப் பயமுறுத்துவதற்கு.

# நாட்டு மக்களின் தலைவிதியை மாற்றப் போகும் தேர்தல்

சேரலாதன்



நாட்டின் ஆட்சிப் பொறுப்பு மகிந்த தரப்பின் வசம் சென்று விட்டால் என்ன நடக்கும் என்பதை கோத்தபாய ஓரளவு கோடிட்டுக் காட்டிக்கூறியுள்ளார். போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததில் கோத்தபாய வகித்த பங்கு மகத்தானது. மகிந்த ராஜபக்ச நாட்டின் அரச தலைவர் என்ற வகையில் முப் படைகளுக்கும் தலைமைப் பொறுப்பை வகித்த போதிலும், கோத்தபாயவே படையினரைக் கட்டுப்படுத்துவதற்கான முழு அதிகாரங்களையும் கொண்டிருந்தார். பாதுகாப்புச் செயலர் பதவி இவருக்கு எல்லையற்ற அதிகாரங்களை வழங்கியதால் தமது எண்ணம் போன்று செயற்படுவதற்கு இவரால் முடிந்தது. ஒரு கட்டத்தில் மகிந்த ராஜபக்சவும் இவருடன் இணங்கிச் செல்ல வேண்டிய அளவுக்கு கோத்தபாய பலம் வாய்ந்த ஒருவராக விளங்கினார். தற்போதுகூட மகிந்தவுக்கு கோத்தபாய மீது ஓர் அச்சவுணர்வு காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாகவே அரச தலைவர் தேர்தலில் தோத்தபாயவை நிறுத்துவதில் மகிந்த தயக்கம் காட்டி வந்தார். மகிந்த அணியைச் சேர்ந்த வேறு சிலருக்கும் கோத்தபாயவை வேட்பாளராக நியமிப்பதில் விருப்பமில்லாத நிலை காணப்படுகின்றது. மகிந்தவின் துதியைப் பாடியவாறு அவருடன் ஒட்டிக் கோண்டிருக்கும் வாசுதேவ நாணயக்கார தமது விருப்பமின்மையைப் பல தடவைகள் வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

**குழப்பங்களின் மத்தியில் கோத்தபாய வேட்பாளராகத் தெரிவு**

கோத்தபாய அரச தலைவர் பதவியில் அமர்ந்து விடுவாரானால் தமது நிலை மோசமானதாக மாறி விடுமெனத் தமிழர்கள் நினைப்பதை உறுதிப்படுத்தும் வகையில் கோத்தபாயவின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவதில் மகிந்தவின் குடும்பத்துக்குள்ளேயே போட்டி நிலவியது. பசில் ராஜபக்ச இதில் தமக்கும் வாய்ப்புக் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன் காணப்பட்டார். சமல் ராஜபக்சவின் பெயரும் பலமாக அடிபட்டது. அரச தலைவர் பதவி மீண்டும் ராஜபக்ச குடும்பத்துக்கு கிடைப்பதை விரும்பாதவர்களும் மகிந்த அணிக்குள் இருக்கவே செய்தார்கள். ஆனால் வெளிப் படையாக எதிர்ப்பதற்கு அவர்களிடம் துணிவு இருக்கவில்லை. தற்போது கோத்தபாய அரச தலைவர் தேர்தலில் போட்டியிடுவது உறுதியாகிவிட்டது. அவரை எதிர்ப்பதற்கு ராஜபக்ச குடும்பத்துக்குள்ளேயே எவருக்கும் திராணி இல்லை என்பதால் அவரது தெரிவில் குழப்பங்கள் எதுவும் இடம்பெறவில்லை. மகிந்த கூட கோத்தாவை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்.

> இன்றைய சூழ் நிலையில் கோத்தபாயவுக்குச் சவால் விடக்கூடிய ஒருவராகச் சஜித் பிரேமதாசவே காணப்படுகின்றார். அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே ராஜபக்ச குடும்பத்துக்குச் சவால் விடும் அளவுக்கு சஜித் அரசியல் செய்துகொண்டிருக்கிறார். இதை அரச தலைவர் தேர்தலிலும் காண முடியும்.

**வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றாதவர் ரணில்**

இதேவேளை - ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் தெரிவு சுமுகமான முறையில் இடம்பெறாமை மிகப் பெரிய குறைபாடாகவே உள்ளது. ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் பதவியில் அமர்வதற்கான தமது விருப்பத்தை இன்னமும் கொண்டிருப்பதாகவே தெரிகின்றது. அவர் நினைத்திருந்தால் வேட்பாளரின் பெயரை எப்போதோ அறிவித்திருக்க முடியும். கடந்த 2005ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் மகிந்த முதன் முறையாகப் போட்டியிட்டார். இவரை எதிர்த்து ரணில் விக்கிரம சிங்க போட்டியிட்டார். மகிந்தவைவிட ரணிலுக்கே வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் காணப்பட்டன. ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்த அதன் முக்கிய தளபதியான கருணாவைப் பிரித்தெடுப்பதில் ரணிலுக்கு முக்கிய பங்கு இருந்ததாக வெளியான தகவல்கள் புலிகளின் தலைமையைக் கடும் சீற்றத்துக்கு உள்ளாக்கியது. தமிழர்களின் பெரும்பாலானவர்கள் ரணிலுக்கே வாக்களிப்பார்கள் என்பதால் அவர்கள் அந்தத் தேர்தலில் வாக்களிக்க முடியாதவாறு புலிகளால் தடைவிதிக்கப்பட்டது. இதனால் ரணில் விக்கிரம சிங்கவுக்கு கிடைக்கவேண்டிய வாக்குகள் இல்லாமற் போயின. இதனால் மகிந்தவின் வெற்றி உறுதியானது. 2015இல் மகிந்த தோல்வியடைந்தமைக்குத் தமிழர்களின் வாக்குகள் முக்கிய பங்கு வகித்ததை எவருமே மறந்துவிட முடியாது.

ரணில் தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதையுமே நிறைவேற்றாத நிலையில் அவர்களின்வாக்குகளை ஒருபோதுமே எதிர்பார்க்க முடியாது. ஆகவே அவரால் இந்தத் தேர்தலில் வெற்றியைப் பெற முடியாது என உறுதியாகக் கூற முடியும். தற்போதுள்ள நிலையில் சஜித் பிரேமதாச, ரணிலுக்குச் சவால் விடும் அளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளார். இவரது தந்தையார் வறிய கிராம மக்களிடத்தில் அதிகளவு அக்கறை கொண்டு உதவிகளை வழங்கியவர் என்ற வகையில் கிராமப் புறங்களில் அவருக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு. சஜித்தும் அதைப் பராமரித்துவருகின்றார். இதனால் சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறுவதில் அவருக்குச் சிக்கல் நிலை எதுவும் இருக்காது. ஆனால் தமிழ் மக்கள் மட்டுமல்லாது சிங்கள மக்களும் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் மிகச் சாதாரணமாகவே இடம்பெற்ற ஆள்களைக் கடத்திக் காணாமல் ஆக்குதல் மற்றும் கொலை செய்தல், கொலைகள், அச்சமூட்டும் பயமுறுத்தல்கள், குற்றவாளிகள் தண்டிக்கப்படாமை மிகச் சாதாரணமாகவே இடம்பெற்ற குற்றச்செயல்கள் ஆகியவற்றை இன்னமும் மறந்து விடவில்லை. அச்சம் நிறைந்த அந்தப் பழைய காலம் மீண்டும் வருவதை அவர்கள் விரும்புவார்களென எதிர்பார்க்க முடியாது.

**கோத்தாவுக்கு எதிராகக் களமிறங்கக் கூடியவர் சஜித்தே**

இன்றைய சூழ்நிலையில் கோத்தபாயவுக்குச் சவால் விடக் கூடிய ஒருவராகச்சஜித் பிரேம தாசவே காணப்படுகின்றார். அம்பாந்தோட்டை மாவட்டத்திலேயே ராஜபக்ச குடும்பத்துக்குச் சவால் விடும் அளவுக்கு சஜித் அரசியல் செய்துகொண்டிருக்கிறார். இதை அரச தலைவர் தேர்தலிலும் காண முடியும். ஆனால், தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளை அதிகம் பெறுகின்ற ஒருவரே அரச தலைவராக முடியும். கோத்தபாய சிங்கள வாக்குகளை மட்டுமே நம்பியிருப்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால், சஜித் சிறுபான்மை மக்களையும் அரவணைத்துச் செல்வதற்கு முயற்சிப்பதும் தெரிகின்றது. இனவாதமும் - மதவாதமும் இந்தத் தேர்தலில் முக்கிய இடத்தைப் பிடிக்கப் போகின்றன. இந்த நாட்டின் எதிர்காலமே இந்தத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்தே அமையுமென்பதை உறுதியாகக் கூற முடியும்.

உதயன்
# செய்திகள்
24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM



# தமிழினத்தை அழிப்பதற்காகவே கோத்தபாய களமிறங்குகிறார்!

## *தமிழ் மக்களே கவனம் என்று எச்சரிக்கிறது காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம்*

*முல்லைத்தீவு, ஓக 15*

*அரசதலைவர் வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டுள்ளார். அவர் எங்களுக்குக் குற்றமிழைத்தவர். தமிழினத்தை அழிப்பதற்காக, சதி மேற்கொள்ளவதற்காகவே அரசதலைவர் வேட்பாளராகக் கோத்தபாய களம் இறங்கியுள்ளார்.*

எனவே எவர் அரசதலைவராக வரவேண்டும் என்பதை தமிழ் மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் முல்லைத்தீவு மாவட்ட சங்கத்தினர் தெரிவித்தனர்.

அவர்களின் அலுவலகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில், சங்கத்தின் தலைவி ம.ஈஸ்வரி தெரிவித்ததாவது:

கோத்தபாயவின் தலைமையிலான படையிடமே எங்கள் உறவுகளை நாங்கள் கையளித்தோம்.

முல்லைத்தீவில் வட்டுவாகல், செல்வபுரம், ஓமந்தையில் பல முகாம்களில் கையளித்தோம். அவரும் சேர்ந்துதான் எங்கள் உறவுகளைக் கடத்தினார், உறவுகள் கொல்லப்பட்டனர்.

அவரால்தான் உறவுகள் அரசியல் கைதிகளாக இருக்கின்றார்கள். அவர் தன்னுடைய குற்றத்தை மறைப்பதற்காக மீண்டும் நாடகமேடை ஏறுகின்றார்.

**உறவுகளை விடுவித்தால் சாதகமாகப் பரிசீலிக்கலாம்**

எங்களுக்கு அரசிடம் நம்பிக்கை இல்லை. அவர் வந்தாலும் என்ன பதில் தருவார் என்றும் எங்களுக்குத் தெரியும். எங்கள் உறவுகளை விடுதலை செய்து, அவர் அரசதலைவராக வந்தால் எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். எங்களின் உறவுகளை இப்போதும் மறைத்துவைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழினத்தை அழிப்பதற்காக சதி மேற்கொள்ளவே கோத்தபாய அரசதலைவர் வேட்பாளராகக் களம் இறங்கியுள்ளார்.

எவர் அரசதலைவராக வரவேண்டும் என்பதை தமிழ் மக்கள் எல்லோரும் தீர்மானம் எடுக்கவேண்டும்.

**30 இல் பெரும் ஆர்ப்பாட்டம்**


பன்னாட்டு காணாமற் போனோர் நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி வடக்கு - கிழக்குப் பகுதிகளில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில்



தொடர்ச்சியாக நடத்திவரும் எமது போராட்டம் 890 ஆவது நாள்களை எட்டியுள்ளது.

30 ஆம் திகதி பன்னாட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தினம். அன்று வடக்கில் உறவுகளைக் கையளித்த இடமான ஓமந்தையிலும் கிழக்கில் கல்முனையிலும், மாபெரும் போராட்டங்களை நடத்தவுள்ளோம். அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றோம்-என்றுதெரிவித்தார். (கு-ரி3)

# மக்கள் அச்சமின்றி வழிபடவே நல்லூரில் பலமான பாதுகாப்பு



யாழ்ப்பாணம், ஓக. 15

மக்கள் அச்சமின்றி வழிபாடுகளில் ஈடுபடவே நல்லூரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் செய்துள்ள அவர், நேற்றுக் காலை நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டிலுள்ள நிலைமைக்கு அமைவாக, நல்லூர் கோயிலுக்கு வரும் அனைத்து பக்தர்களுக்கும் தேவையான பாதுகாப்பை வழங்க, இலங்கை இராணுவம், கடற்படை, வான்படை என முப்படையும் நடவடிக்கை எடுத்துள்ளன. ஏப்ரல் மாதம் இடம்பெற்ற தாக்குதலால்தான் இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகளை சற்று அதிகமாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. மக்களின் பாதுகாப்புக்காகவே எம்மால் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மாறாக அவர்களுக்கு இடையூறு விளைவிக்க அல்ல என்பதை நான் இவ்வேளையில் கூறிக்கொள்கி றேன். இங்கு வரும் அனைவரும் அச்சமின்றி வழிபாடுகளில் ஈடுபடவேண்டும் என்பதுதான் எமது நோக்கமாகும். மக்களின் பாதுகாப்பு தொடர்பாக எமக்கு பெரிய பொறுப்பு உள்ளது. இதற்காக கடமைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து பாதுகாப்புத் தரப்பினருக்கும் நான் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (ம)

# விபத்தில் இருவர் காயம்

வவுனியா, ஓக. 15

வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுமுற்பகல் நடந்த விபத்தில் இருவர் காயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஏ-9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்த மகிழுந்தும் உந்துருளியும் மோதி விபத்து இடம்பெற்றது. உந்துருளியில் பயணித்த இருவரே காயமடைந்தனர். வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணையை நடத்துகின்றனர். (கு-ரி4)

## *வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளில்*

# தமிழர் வாழ்ந்த அடையாளங்கள் பல ஆனால் தமிழர்கள் எவருமே இல்லை

## *தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு*

செங்கலடி, ஓக. 15

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிலும் தமிழர்கள் வாழ்ந்த அடையாளங்கள், வழிபட்ட பிரசித்திபெற்ற ஆலயங்கள் உள்ளன. ஆனால் அந்தப் பகுதிகளில் தமிழர்கள் இல்லை என்று தெரிவித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் கி.துரைராசசிங்கம், வடக்கு - கிழக்கில் சரியான தலைமைத்துவம் இருந்ததன் காரணமாக தமிழர்கள்! தமிழர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விழிப்புணர்வுக் கருத்தரங்கு மட்டக்களப்பில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் கேட்கின்ற உரிமை வெறுமனே தமிழர்களுக்கான உரிமை அல்ல. மனிதர்களுக்கான அடிப்படை உரிமை. எங்களுடைய உரிமைகள் இந்த நாட்டின் அரசியல் சாசனசட்டத்தில் பதிக்கப்பட வேண்டும் என்று தொடர் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

வீர யுகத்திலே பல விடுதலை இயக்கங்கள் தோன்றின. பல முனைகளிலிருந்து நடத்துகின்ற தாக்குதலிலிருந்து நாங்கள் விடுதலையடைய முடியாது. ஒரே முனை, ஒரே சிந்தனை, ஒரே நெறியுறுத்தலிலிருந்து தாக்குதல் இருக்க வேண்டும் என்று எல்லோரையும் ஒன்றித்து ஒரே இயக்கமாக இவர்கள் இருந்ததன் காரணமாகத்தான் உலக நாடுகள் அனைத்தும் கண்ணை விழித்துக்கொண்டு பார்க்க கூடியதாக இங்கு வீர யுக வரலாறு நிகழ்ந்தது.

அன்று வீரத்தின் திரழ்ச்சி இருந்ததுபோல தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காணப்படுகிறது. கூட்டமைப்பில் சிதறல்கள் ஏற்பட்டுவிடாதா என்று பெரும் தேசிய கட்சிகள் பார்த்துக்கொண்டிருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலவீனமடைந்தால் புதிய அரசமைப்பு உருவாக்க விடயம் எங்களுக்கு வராது. தொடர்ச்சியாக இருக்கின்ற தலையிடி போய்விடும் என்று நினைக்கிறார்கள். தமிழர்களின் உரிமைகள் அரசியல் சாசனத்தில் எழுதப்படாத நிலைமையை எதிர்பார்க்கிறார்கள். வடக்கு - கிழக்கிலே தமிழர்களின் ஒற்றுமையைச் சீர்குலைப்பதற்காக பேரினவாதிகள் முகவர்களைக் கொண்டுவருகிறார்கள்.

அபிவிருத்திகளைச் செய்வதாக வித்தை காட்டுகிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் காரணமாக முழுதாக இல்லாவிடினும் குறிப்பிட்ட நிலங்களை விடுவித்துள்ளோம். சிறையிலிருந்த அரசியல் கைதிகளில் ஒரு பகுதியினரை விடுவித்துள்ளோம், ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைப் பேரவையில் பொறுப்புக்கூறல் விடயத்துக்கு இலங்கை அரசை உட்படுத்தியுள்ளோம், புதிய அரசமைப்பைக் குறிப்பிட்ட அளவுக்கு உருவாக்கிக்கொண்டு வந்துள்ளோம், வரவு - செலவுத் திட்டத்தில் அதிகமான நிதியை வடக்கு - கிழக்குக்கு ஒதுக்கிவைத்துள்ளோம்.

எங்களுடைய உரிமையை வைத்திருக்கின்ற பெரும் தேசியக் கட்சிகள் எங்களுக்கு உரிமை கொடுக்கின்ற ஒவ்வொரு நேரத்திலும் தென்னகத்திலே பிரிந்திருக்கின்ற மற்றைய கட்சிகள் தமிழர்களுக்கு உரிமை் கொடுக்கப் போகிறார்கள் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு பயமுறுத்துகின்றபோது அதே சிங்கள பெரும்பான்மையினரிடமிருந்து வாக்குகளைப் பெற்றுத்தான் தங்களுடைய ஆட்சியைப் பிடித்துக்கொள்ள வேண்டும் என்று இருக்கின்ற கட்சி எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதை நாங்கள் பார்க்க வேண்டும்.

உங்களுக்கு உதவி செய்வதன் மூலம் அவர்களின் மூலதனத்தை இழந்துவிடக்கூடாது என்பதில் அவர்களுக்கு அக்கறை உண்டு என்பதை நம்பித்தான் ஆகவேண்டும். அவர்கள் தங்களின் மூலதனத்தை இழந்தவிட்டால் எங்களுக்கான குரல் அங்கிருந்து வராது என்பதை நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும். வாக்குறுதிகள் காற்றிலே பறக்க விடப்படும்போது நாங்கள் வேறு திசைக்கு வரமுடியாது - என்றார். (த)

## வருடாந்த திருவிழா

அளவெட்டி.ஓக.15

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் சிறிநாக வரத நாராயணர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து12 நாள்கள்நடைபெறும்.

தினமும் காலை,மாலை வேளைகளில் உற்சவங்கள்நடைபெறும். காலை 8 மணிக்கு சிறப்பு அபிசேக பூஜைகள் நடைபெற்று 9.30மணிக்குதம்பபூஜை இடம்பெற்று 11 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையுடன் நிறைவடையும்.

மாலை 4.30 மணிக்கு சாயரட்சைப்பூஜையும், 6 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையும்நடைபெற்று நாராயணப்பெருமானின் வீதியுலா இடம்பெறும். எதிர்வரும் 22 ஆம் திகதி இரவு7மணிக்குகைலாய வாகனத் திருவிழாவும், 23 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 24 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் நடைபெற்று, இரவு 7.30 மணிக்கு உறியடி உற்சவமும்,25ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ஐ-36)

## துப்புரவுப் பணி முன்னெடுப்பு

கொடிகாமம்,ஓக.15

யாழ்ப்பாணம், கொடிகாமம் பிரதேச (மிருசுவில்) மருத்துவமனை வளாகத்தில் நேற்றையதினம் துப்புரவுப் பணி இடம்பெற்றது.

மருத்துவமனைப் பொறுப்பதிகாரி மருத்துவர் சி.ராஜகுமாரின் கோரிக்கைக்கு அமைவாகச் சாவகச்சேரி பிரதேசசபையின் உபதவிசாளர் செ.மயூரனின் ஏற்பாட்டில் இந்தத் துப்புரவுப் பணி இடம்பெற்றது.

மருத்துவமனை வளாகம் மற்றும் மருத்துவமனை அண்டிய வீதிப் பகுதிகளிலும் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மருத்துவமனை ஊழியர்கள், மருத்துவமனை நலன்புரி சங்கத்தினர் மற்றும் சாவகச்சேரிப் பிரதேச சபை ஊழியர்கள் ஆகியோர் இணைந்து துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். (ஐ-159)



### நல்லூர் ஆலய வளாகத்தில்

# அர்த்தமற்ற கெடுபிடிகளை உடன் நிறுத்த வேண்டும்

### ரெலோ இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.15

நல்லூர்க் கந்தன் ஆலய வளாகத்தில் அநாவசியமானதும், அளவுக்கு மிஞ்சியதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, வழிபாட்டுக்குச் செல்லும் பக்தர்கள் அர்த்தமற்ற கெடுபிடிகளுக்கு ஆளாக்கப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த ஏப்ரல் மாதம் நிகழ்த்தப்பட்ட இஸ்லாமிய தீவிரவாதத் தாக்குதல்களின் அனுபவப் பின்னணியில், ஆயிரக்கணக்கில் மக்கள் கூடும் நிகழ்வுகளில் முன்னெச்சரிக்கையுடன் கூடிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவையாக உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால் இத்தகைய ஏற்பாடுகளும் நடவடிக்கைகளும் சாத்தியமான அளவில் மக்களை உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் அசௌகரியங்களுக்கு உட்படுத்தாத முறையில், செயற்படுத்தப்படவேண்டும் என்பது அவசியமானது.

அதேநேரத்தில் கடும் இறுக்கமாக வடிவமைக்கப்படும் எந்தவொரு பாதுகாப்பு ஏற்பாடும் ஊடுருவப்பட முடியாதது என்று நூற்றுக்கு நூறு வீதம் எவரும் உறுதியளிக்க இயலாது என்பது உலகறிந்த உண்மையாகும். நல்லூர் முருகன் ஆலய உற்சவ காலத்தைப் பொறுத்த மட்டில், பாதுகாப்பு நடவடிக்கைகளை, வழக்கம் போல பொலிஸார், நவீன கருவிகளின் உதவியுடன் நாகரிகமான முறையில் தாராளமாக மேற்கொள்ள முடியும்.

இந்த நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருப்பதும், கணிசமான எண்ணிக்கையில் ஆலயச் சுற்றாடலில் நிலைகொண்டிருப்பதும், தேவையற்றது என்பதோடு, பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற தொடர் விவகாரத்தை, நல்லூர் ஆலய உற்சவம் தொடர்பில் ஊதிப் பெருப்பிக்கும் ஒரு நடவடிக்கையாகவே தோற்றமளிக்கின்றது.

மக்களின் மன உணர்வுகளுக்கு மதிப்பளித்து கெடுபிடிகள் கலந்த பாதுகாப்புச் சோதனைகளை மறுசீரமைத்து, பொலிஸாரின் கரங்களில் முழுமையாக அவற்றை ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் நாம் கோருகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## சிறுவர் பூங்கா அன்பளிப்பு

ஏழாலை.ஓக.15

யாழ்ப்பாணம், ஏழாலை தெற்கு மயிலங்காடு சிறிமுருகன் முன்பள்ளி, மழலைகளுக்குச் சிறுவர் பூங்கா ஒன்று அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பூங்கா இரண்டு லட்சத்து முப்பத்தையாயிரம்ரூபாசெலவில் அமைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த நடராஜா செல்வராணி குடும்பம் மற்றும் மயிலங்காடு மன்னாஸ் கூல்பார் உரிமையாளர் ஆகியோர் நிதிப்பங்களிப்புச் செய்துள்ளனர். மயிலங்காடு ஐரோப்பிய ஒன்றிய கலாசார மண்டபக்கட்டடத் தொகுதியில் இயங்கும் சிறிமுருகன் முன்பள்ளிக்கு அந்த வளாகத்திலேயே ஏழாலை தெற்கு மயிலங்காடு இளைஞர் நற்பணி மன்றத்தின் ஆதரவுடன் இந்தச் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டது. கடந்த வாரம் இது திறந்து வைக்கப்பட்டது. (ஐ-39)

# பல்கலை மாணவர்கள் வகுப்புப் புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,ஓக,15




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இன்றும், நாளையும் வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர் என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது பற்றிமேலும்தெரிவிக்கப்பட்டதாவது:

மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் இருந்து கல்வி கற்று வெளியேறி ஒரு வருடம் கடந்தும் பல பீடங்களுக்கு இதுவரை பட்டமளிப்பு நிகழ்வு இடம்பெறவில்லை.

இதற்கு வேந்தர் நியமிக்கபடாமை ஒரு காரணமாக உள்ளது.

எனவே வேந்தரை விரைவாக நியமிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுபட்டமளிப்புஇடம்பெறாத பீடங்களுக்கு பட்டமளிப்பு நிகழ்வை விரைவாகநடத்த வேண்டும்.

3 மாத காலப்பகுதியில் சில பரீட்சைகளின் பெறுபேறுகளை வழங்காமையால் பலமாணவர்கள் விடுகைப்பத்திரத்தை உரிய நேரத்தில் பெற முடியாமல் போவதுடன் அதனால்பலபிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இதனைச் சீர் செய்யுமாறு பலமுறை கூறியதுடன் மேலும் இது தொடர்பாக கடந்த 7ஆம் திகதி நாம் வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடப்போகின்றோம் எனக் குறிப்பிட்டுத் தகுதி வாய்ந்த அதிகாரிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி இருந்தும், இதுவரை இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை.

எனவே இது தொடர்பில் இன்றும்,நாளையும்வகுப்புப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம் என்றுமாணவர்ஒன்றியம் அறிவித்தள்ளது. (ஐ-7)



## நல்லூரில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்ட இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இராணுவத் தளபதி மகேஸ் சேனாநாயக்க வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு சென்று நேற்று சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டார்.

நல்லூர்க் கந்தன் ஆலய உற்சவகால பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

இதன்போது இராணுவத் தளபதியுடன் யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி உள்ளிட்ட இராணுவத்தினரும் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

இராணுவத் தளபதியின் நல்லூருக்கான வருகையை முன்னிட்டு ஆலயத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (ஐ-ரி1)

## தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,ஓக.15

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை சிறி துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 நாள்கள் திருவிழா நடைபெறும். அடுத்த மாதம் 9ஆம் திகதி திங்கட்கிழமை சப்பரத் திருவிழாவும், மறுநாள் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும்,11ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்என்று ஆலய நிர்வாகசபை அறிவித்துள்ளது. (ஐ)

# விசித்திர விளையாட்டு வினையாகிப் போனது

யாழ்ப்பாணம்,ஓக,15

தலையில் முட்டியை வைத்து கல்லெறிந்து உடைத்து விளையாடும் விசித்திர விளையாட்டில் சிறுவன் ஒருவன் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பகுதியில் அண்மையில் இடம்பெற்றது.

சிறுவர்கள் இருவர் ஒருவரின் தலையில் முட்டியை வைத்து மற்றவர் சிறுவர் எறிந்து உடைக்கும் விளையாட்டை விளையாடியுள்ளனர். இதன் போது முட்டிக்கு எறிந்த கல் தலையில் பட்டதில் சிறுவன் ஒருவனுக்குத் தலையில் காயம் ஏற்பட்டது.

காயத்துக்கு உள்ளான சிறுவன் தெல்லிப்பழை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சையின் பின்னர் பொலிஸ் ஆலோசனை பெற்று வீட்டுக்குச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இரு சிறுவர்களில் ஒருவர் முன்பள்ளியிலும் மற்றைவர் ஆரம்ப பாடசாலையிலும் கல்வி கற்கின்றனர். (ஐ-7,26)

## குடும்பத் தலைவர் சடலமாக மீட்பு

கொடிகாமம்,ஓக.15

குடும்பத் தலைவர் ஒருவர் தவறாக முடிவெடுத்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப் பட்டார்.

இந்தச் சம்பவம் மீசாலை வடக்கில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நடராஜசுந்தரம் (வயது -54) என்ற குடும்பத் தலைவரே சடலமாக மீட்கப்பட் டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-159)

# போரால் தமிழகம் சென்றோரை வாக்காளராக இணையுங்கள்

## வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மறுவாழ்வு சங்கத்தின் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.15

இலங்கையில் நடைபெற்ற போரால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து இடம்பெயர்ந்து இந்தியாவில் தங்கியுள்ளவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் இணைப்பதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்தோர் மறுவாழ்வுச் சங்கத் தலைவர் குணபாலசிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர் காரணமாக 1983ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை வடக்கு - கிழக்கில் இருந்து ஒரு லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இந்தியாவுக்குத் தப்பியோடினர். அவர்கள் இப்போது தமிழகத்தில் அகதி முகாம்களிலும், வாடகை வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

அவர்களில் பலர் நாடு திரும்புவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள போதும், பல நெருக்கடிகள், இடையூறுகளால் நாடு திரும்ப முடியாத நிலமை உள்ளது. ஆரம்ப காலத்தில் இங்கிருந்து இடம்பெயர்ந்து சென்றவர்களின் பிள்ளைகள் தற்போது திருமண மாகித் தனிக் குடும்பங்கள் ஆகியுள்ளனர்.

அவர்களுக்கான இலங்கைப் பதிவுகள், பதிவுச் சான்றிதழ்கள், அடையாள அட்டைகள் இல்லாதமையாலும், இங்கு காணிகள், வீட்டு வசதிகள் இன்மையாலும் அவர்கள் நாடு திரும்புவதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

தமிழகத்தில் தங்கியுள்ள சுமார் ஒரு லட்சம் மக்களை நாட்டுக்கு அழைத்து அவர்களுக்கான இருப்பிட வசதி, உட்கட்டுமான அபிவிருத்திகளைச் செய்து கொடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு.

இவ்வாறு போரால் இடம்பெயர்ந்தவர்கள் புலம்பெயர் நாடுகளில் உள்ளனர்.

முக்கியமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலி.வடக்கு மற்றும் வல்வெட்டித்துறை மக்கள் அதிகமாகத் தமிழ்நாட்டில் தங்கியுள்ளனர்.

அவர்கள் தாயகம் திரும்பும்வரை அங்கிருந்தவாறே வாக்காளர் பட்டியலைத் தொடர்வதற்கான ஏற்பாடுகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொள்ள வேண்டும்- என்றார். (எ-105)

## இந்தியத் தூதரகத்தினர் பலாலி வானூர்தி தள சீரமைப்பு தொடர்பாக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக.15

பலாலி வானூர்தி நிலையத்தில் நடைபெறும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், வானூர்திப் படை அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இன்று யாழ்ப்பாணம் வரவுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாளை பலாலி வானூர்தித் தள அபிவிருத்திப் பணிகளை நேரில் சென்று ஆராயவுள்ளார். இந்த நிலையில் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் அபிவிருத்தி தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் அபிவிருத்திப் பணிகளை நிறைவு செய்ய எடுக்கும் காலம், குறிக்கப்பட்ட காலத்தில் பலாலி மற்றும் இந்தியா இடையிலான வானூர்திச் சேவைகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியம் என்பன தொடர்பாகப் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

பலாலி வானூர்தித் தளத்தில் இருந்து இந்தியாவுக்கு நேரடியாக வானூர்திச் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று, இந்தியத் தூதரகமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 2015ஆம் ஆண்டில் இருந்து முயற்சிகளை எடுத்திருந்தன. தற்போதே வானூர்தித் தள அபிவிருத்திகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. (எ-105)

## டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் உடுவிலில் இன்று ஆரம்பம்

ஏழாலை, ஓக.15

உடுவில் பிரதேச செயலகப் பிரிவின் ஜே/ 203 ஏழாலை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் சிறப்பு டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் இன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் எதிர்காலத்தில் டெங்கின் தாக்கம் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படும் கிராம அலுவலர் பிரிவுகளில் இந்த டெங்கு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மாநகரசபைக்கு அடுத்த நிலையில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவில் டெங்கின் தாக்கம் அதிகரித்துக் காணப்பட்டது.

இந்த நிலையில் இவ்வருடத்தின் மழைகாலத்தில் டெங்குத் தாக்கம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படும் கிராமங்களில் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவால் பிரதி வியாழக்கிழமைகளில் டெங்கு ஒழிப்பு செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இவ் சிறப்பு வேலைத் திட்டத்தில் சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்பநல அலுவலர்கள், டெங்கு களத்தரிசிப்பு அணி அலுவலர்கள், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், சமுர்த்தி அபி விருத்தி அலுவலர்கள் குறித்த கிராம அலுவலர் பிரிவுகளின் கிராம மட்ட உறுப்பினர்கள் மற்றும் வலி. தெற்கு பிரதேச சபையின் கழிவகற்றல் பிரிவினர் எனப் பலரும் களத்தரிசிப்புக்களை மேற்கொள்ளவுள்ளனர். (ஐ-39)

## குடும்ப தலைவர் சடலமாக மீட்பு

கொடிகாமம், ஓக.15

குடும்பத் தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தென்மராட்சி வரணிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சுரேஸ்குமார் (வயது 48) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் வேலையால் இரவு வீட்டுக்கு வந்து உறங்கியுள்ளார்.


சாப்பிடுவதற்காக மனைவி அழைத்த தருணம் சத்தமேதுமின்றி உறக்கத்தில் இருந்தவரை அருகில் சென்று பார்த்த போது அவர் உயிரிழந்திருந்தமை தெரிய வந்துள்ளதாக உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-159)

## யாழ்ப்பாணக் குடாநாட்டில் மீண்டும் நோய்த்தாக்கமின்றி வளரும் கல்யாண முருங்கை

ஏழாலை, ஓக.15



யாழ்ப்பாணம், வலிகாமம் பகுதிகளில் நோய்த் தாக்கத்தால் அழிவடைந்து சென்ற கல்யாண முருங்கை மரங்கள் மீண்டும் நோய்த்தாக்கம் இல்லாது மாறி வருவதைக் காணக் கூடியதாக வுள்ளது. இதனால் எதிர்காலத்தில் கல்யாண முருங்கை மரங்களை அதிகளவில் நடுவதற்கு மக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குடாநாட்டில் கால்நடைக்குளளியமுறை தீவனமாக கூடுதலாக உதவிய கல்யாண முருங்கை மரங்கள் ஒருவகை பூச்சியின் தாக்கத்தால் முற்றாக அழிவடைந்தநிலைக்குள் மாறியது.

இதனால் குறித்த முருங்கை மரத்தின் இலைகளை கால்நடைகளுக்கு வழங்குவதால் பாதிப்பு ஏற்படும் என்ற காரணத்தால் நோய்த்தாக்கம் உள்ளமரங்களை அழித்து வந்தனர்.

தமிழர்களின் திருமணச் சடங்குகளில் ஒன்றான பொன்னுருக்கின் போது குறித்தகல்யாணமுருங்கை மரத்தையேபயன்படுத்துவதால் இந்த இனத்தை அழிய விடாது பலர் நோய்த்தாக்கத்துடனும் வளர்த்துவந்தனர்.

அத்தகைய கல்யாண முருங்கைமரங்கள் எவ்வித நோய்த்தாக்கமும் இன்றி நல்ல நிலையில் நன்றாக த்தற்போது வளர்ந்து வருவதைக்காணக்கூடியதாகவுள்ளது. கிடுகு வேலிகளினதும், பனையோலைவேலிகளினதும் பாதுகாப்பு வேலிகளாக இருந்தகல்யாணமுருங்கை மரங்கள் தற்போதைய நவீனகாலத்தில் சுற்றுமதில் மற்றும் தகர வேலிகளுக்காக அழிக்கப்பட்டன.

சடங்குகளுக்கும் கால்நடை தீவனங்களுக்குரியதாகவும் உள்ள கல்யாண முருங்கை மரங்களின் உற்பத்தியை பெருகச் செய்ய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கால்நடைவளர்ப்போரும், சமூக ஆர்வலர்களும் தெரிவித்துள்ளனர். (ஐ-ரி1)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 15

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருவிழாவின் பக்தி நிகழ்வுகள் வரிசையில் சிறீலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட நவாலி கதிர்காம முருகன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

✦ ✦ ✦ ✦

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்று வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறியில் இன்று மாலை 6.30 மணிக்கு வணக்கத்துக்குரிய நல்லை ஆதீன முதல்வர் சிறீலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலய முதன்மைக் குரு, சிவஸ்ரீ ப.ஜெயக்குமாரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி.ஹேமலோஜினி குமரனின் தலைமையில், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன் முதன்மை அதிதியாகவும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் சதாசிவம் நிமலன் சிறப்பு அதிதியாகவும் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட, கம்பர்மலை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, கல்யாணசுந்தரர் அறநெறிப் பாடசாலை, சைவத்திருத் தொண்டர் அறநெறிப் பாடசாலை மற்றும் அல்லையம்பதி சுப்பிரமணியர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், "இந்து சாதனம்" இதழாசிரியர் சிவஸ்ரீ தியாக மயூரகிரிக்குருக்களின் "உமையம்மையார் சிவனை நீங்குதல்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன.

சிறப்புச் சொற்பொழிவின்போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இன்றைய தின நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக திருவேரகம் இசைநடனக் கல்லூரியின் இயக்குநர், மட்டுவிலூர் தெ.திருவேரகனின் இசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

✦ ✦ ✦ ✦

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் இலங்கை இளங்கலைஞர் மன்றத்தால் தினமும் மாலை 6.45 மணி தொடக்கம் 8.15 மணி வரை தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

தெய்வீக இசையரங்கில் இன்று குழு இசை, இசைக்கச்சேரி, என்பன இடம்பெறவுள்ளன.

குழு இசையை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவர்களும் அதற்கான வயலின் க.வித்தியாசாகர், மிருதங்கம் ச.அர்பிந்தா ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.


இசைக்கச்சேரியில் பாட்டுபங்கயற்செல்வி முகுந்தன், வயலின் அ.ஜெயராமமன், மிருதங்கம் ஜெ.கானகோகிலம், தபேலா ச.ஜெனில்சங்கர் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். (ஐ)

# இனப்படுகொலையாளிகள் ஆட்சிக்கு வந்தால் படையினர் சாரைசாரையாகப் படையெடுப்பர்

## அந்தக் கொடிய நாள்கள் மீளவரவேண்டுமா என்று சிந்தியுங்கள்
## செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தலில் சிவமோகன் எம்.பி. அறிவுறுத்து

முல்லைத்தீவு, ஓக. 15

தமிழர் இனப்படுகொலையைக் கனகச்சிதமாக முடித்துக்கொண்ட வர்கள், போர்க் குற்றங்களைச் சர்வ சாதாரணமாக நிறைவேற்றிக்கொண்ட வர்கள்தான் இன்று தேர்தலில் குதிப்பதற்காகக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்தால், படையினரின் கைகள் கட்ட விழ்த்துவிடப்படும், வீதிகளில் சாரைசாரையாகப் படையினர் படையெடுத்துத் திரிவர்? இளைஞர்கள் மீது அராஜகம் சர்வசாதாரணமாக நிறைவேறும்.



இவ்வாறு எச்சரித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிவமோகன். முல்லைத்தீவு செஞ்சோலை வளாகத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி இலங்கை வானூர்திப் படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் 61 மாணவர்கள் கொல்லப்பட்டிருந்த னர். இன்னும் ஏராளமானோர் படுகாயமடைந்திருந்தனர்.

கொல்லப்பட்ட மாணவர்களின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் முல் லைத்தீவு மாவட்டத்தில் சில இடங் களில் நேற்று நடைபெற்றன. வள்ளிபுனம் பகுதியில் கண்ணீர் மல்க நடைபெற்ற நினைவேந் தலில் உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: கொலை உங்களது கொள்கை, கொள்ளையும் உங்களது கொள்கை, அந்தக் கொள்கைகளு டன் அலைந்தீர்கள். அந்தக் கொள் கைகளை வைத்துக்கொண்டு தமிழினப் படுகொலைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வந் தீர்கள். அதன் ஒரு அடையாளம் தான் செஞ்சோலை மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்.


இந்தத் தாக்குதலுக்கு அன்றைய ஆட்சியாளர்கள் கூறிய காரணம் செஞ்சோலை வளாகத்தில் இருந் தபடியால் அது விடுதலைப்புலி களால் ஒழுங்குபடுத்தப்பட்டதாக எண்ணிக்கொண்டார்கள் என் பது. அன்றைய காலகட்டத்தில் 400 வரையான மாணவர்கள் பயிற்சிக்காகச் சென்றார்கள். அதி



கமான மாணவர்களை ஒன்றாக் கக்கூடிய இடமாகத்தான் செஞ் சோலை வளாகம் இருந்தது. எனவே அதனை கல்வித் திணைக்க ளங்கள் கேட்டுக் கொண்டதன் பேரில்தான் விடுத லைப்புலிகளால் அந்த வளாகம் வழங்கப்பட்டிருந்தது.

அன்று நடத்திய மிலேச்சத்தன மான வானூர்தித் தாக்குதலை இன்றாவது நீங்கள் உணர்வீர் களா?. அல்லது பன்னாடுகளாவது இது ஒரு பெரும் இனப்படுகொலை என்பதை ஏற்றுக்கொள்வார்களா? அல்லது இது ஒரு போர்க்குற்றமாக ஏற்றுக்கொள்வார்களா?

மக்களே! நாங்கள் சொல்லி நீங் கள் செய்யவேண்டியதில்லை. நீங்களாகவே சிந்திக்கவேண்டி யவர்களாக இருக்கின்றீர்கள். இந் தக் கொடூரர்கள் மீண்டும் வரு வார்களானால் மீண்டும் படையி ரின் கைகள் கட்டவிழ்த்துவிடப்ப டும், வீதிகளில் சாரைசாரையாக படையினர் படையெடுத்து திரிவர்? இளைஞர்கள் மீது அராஜகம் சர்வ சாதாரணமாக நிறைவேறும், ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்படுவார்கள், புலம்பெயர் வார்கள். இந்தக் கொடூ ரங்க ளைச் செய்வதற்கு மீண் டும் கங்கணம் கட்டிக் கொண்டு நிற் கின்றார்கள் என்று தெரிவித்தார்.



**பிரத்தியேக இடம்**

வானூர்திக் குண்டுத் தாக் குதலில் கொல்லப்பட்ட செஞ்சோலை மாணவர்க ளின் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் செஞ் சோலை வளாகத்தின் ஓர் இடத்தில் நேற்றுக்காலை கடைப்பிடிக்கப்பட் டது. வடக்கு மாகாணசபை முன் னாள் உறுப்பினர் ஆ.புவனேஸ் வரன், புதுக்குடியி ருப்பு பிரதேச சபை உறுப்பினர் சி.குகநேசன் மற்றும் பொதுமக்கள் இணைந்து சுடர் ஏற்றி அஞ்சலி செலுத் தினர்.

**கள்ளப்பாடு**

முல்லைத்தீவு கள் ளப்பாடு பகுதியி லுள்ள தனது மக்கள் தொடர்பகத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் நினை வேந்த லில் ஈடுபட்டார்.

இதில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வ ரன் உட்படப் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர்.


**நினைவு வளைவு திறப்பு**

அதனை தொடர்ந்து படுகொலை செய்யப்பட்ட மாணவர்கள் நினை வாக வள்ளிபுனம் முதன்மை வீதியிலிருந்து இடைக்கட்டு வீதி யில் அமைக்கப்பட்ட நினைவு வளைவு திறந்து வைக்கப்பட்டது. உயிரிழந்த மாணவர்களின் நினைவாக வன்னிக்குறோஸ் நினைவேந்தல் அமைப்பின் ஏற் பாட்டில் ஆத்மசாந்திப் பிரார்த் தனையும் நடைபெற்றது.

**யாழ்.பல்கலை**

செஞ்சோலைப் படுகொலையின் 13ஆவது நினைவேந்தல் யாழ்ப் பாணப் பல்கலைக் கழகத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. கொல்லப்பட்ட மாணவிகளின் உருவப் படங்களுக்கு மெழுகு வர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப் பட்டது. இதில் பல்கலைக் கழக சமூகத்தினர் கலந்து கொண்ட னர்.

(த.7,ரி3,246)



# செஞ்சோலைப் படுகொலை நினைவு வளைவு திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

முல்லைத்தீவு வள்ளிபுனம் செஞ் சோலை மாணவிகள் படுகொலைசெய் யப்பட்டதன் நினைவாக அமைக்கப் பட்ட நினைவு வளைவு நேற்றுத் திறந் துவைக்கப்பட்டது. படுகொலை இடம் பெற்று 13ஆம் ஆண்டு நினைவேந்த லான நேற்று இது திறந்து வைக்கப்பட் டது.



61 மாணவிகள் வானூர்திப் படையின் குண்டு வீச்சில் படுகொலைசெய்யப்பட் டிருந்தனர். அதன் நினைவாக நினைவு வளைவு அமைக்கப்பட்டுத் திரை நீக்கம் செய்யப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் பிள் ளைகளைப் பறிகொடுத்த தந்தையார் பொதுச் சுடரை ஏற்றினார். தொடர்ந்து பொது திருவுருவப் படத்துக்கு இலங் கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலை வர் மாவை சோ.சேனாதிராசா சுடர் ஏற்றினார். கட்சியின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் மலர்மாலை அணிவித் தார்.

அதனைத் தொடர்ந்து தாக்குதலில் கொல்லப்பட்டவர்க ளுக்கு அவர்களின் உறவுகள் சுடர்கள் ஏற்றி, மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அத னைத் தொடர்ந்து மாணவிகள் நினை வாக அமைக்கப் பட்ட நினைவு தூபி திரைநீக்கம் செய்யப் பட்டது.

வன்னிகுறோஸ் தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், உயிரிழந்த உறவுகளின் பெற்றோர்கள் பொதுமக் கள், அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (த-7)

# ப.நோ.கூ. சங்க ஊழியர்களின் படுகொலை நினைவுதினம்

தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழி யர்கள் படுகொலையின் 35 ஆவது ஆண்டு அஞ்சலி நிகழ்வு சங்கத்தின் முன்றிலில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

கைதடி சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள் இணைந்து நினைவு கூர்ந்தனர் 1984 ஆம் ஆண்டு இதே நாளில் தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் 8 பேரும் பொதுமக்கள் 6 பேருமாக மொத்தம் 14 பேர் விமானப் படையால் சுட்டுக்கொல்லப்பட்டனர். (ஐ-159,9)



# தீர்க்கமான வாக்குறுதி அளிப்பவருக்கு வாக்கு

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக.15

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினை தொடர்பாக தீர்க்கமான வாக்குறுதி வழங்குபவர்களுக்கு எமது வாக்குகளை வழங்குவோம் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி உறவினர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். எதிர்வரும் அரச தலைவர் தேர்தல் தொடர்பாக அவர்கள் கிளிநொச்சியில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் வேட்பாளரால் மகிந்த தரப்பினரால் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்டுள்ளார். அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியும். எமது உறவுகள் தொடர்பான விவரங்களை வெளியிட வேண்டிய கடப்பாடு அவர்களுக்கு உண்டு.

எவரும் தேர்தலில் போட்டியிடலாம். ஆனால் எமது பிள்ளைகள், உறவுகள் தொடர்பாகத் தீர்க்கமான வாக்குறுதி வழங்குபவர்களுக்கே நாம் வாக்களிப்போம்- என்றனர். (எ-6)



# நாகத்தைப் பார்க்க குவிந்தனர் மக்கள்

வவுனியா, ஓக. 15

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நாகம் ஒன்று வீதிக்கு வந்ததால் அதைப் பார்க்க மக்கள் ஒன்றுகூடியதால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அந்த நாகம் கோவிலில் விடப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

தாண்டிக்குளம் பகுதி உணவகத்துக்கு அருகில் வயல்வெளியிலிருந்து நாகம் ஒன்று வீதிக்கு வந்துள்ளது. அங்கு நின்றவர்கள் மட்டுமன்றி அந்த வீதியில் பயணித்தவர்கள் வாகனங்களை நிறுத்திவிட்டு நாகத்தைப் பார்வையிட்டனர்.

நாகம் வீதியில் நின்ற உந்துருளிக்குள் மறைந்து கொண்டது.

அதனைவெளியில்எடுத்துவிடும் நோக்குடன் உணவகத்துக்கு அருகிலுள்ள சாந்தசோலை நாகபூசணி அம்மன் கோவிலுக்கு உந்துருளியில் கொண்டு செல்லப்பட்டது. அங்கு நின்ற ஒருவர் நாகபாம்பைக் கையால் கோவி லில் விட்டார். (து-110)

# பன்னாட்டுச் சமூகமும் தமிழரை நயவஞ்சகமாக ஏமாற்றிவிட்டது

## கூட்டமைப்பின் சிவமோகன் எம்.பி. தெரிவிக்கிறார்

மன்னார், ஓக. 15

எமது கைகளில் ஆயுதங்கள் இருந்தபொழுது எத்தனை வல்லரசு நாடுகள் எங்களை நோக்கி வந்தன. அவற்றின் போலி வாக்குறுதிகளால் தமிழ்த் தேசியம் வீழ்ந்து கிடக்கிறது. இப்போதாவது தமிழ் மக்களுக்கு நீதியான நியாயமான தீர்வை இடித்துரைக்க முடியுமா? பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தில் ஒப்பமிட்ட இந்திய தேசம் என்ன பார்த்துக் கொண்டிருக்கிறது? பன்னாட்டுச் சமூகம் எம்மை நயவஞ்சகத் தனமாக ஏமாற்றியிருக்கிறது. எனவே தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நமது பலத்தைக் காட்டவேண்டிய சூழ்நிலையில் உள்ளோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் சில கிராமங்களின் அபிவிருத்திக்காக தனது துரித அபிவிருத்தி நிதியில் செய்யவுள்ள வேலைகளுக்கு நிதி அனுமதி வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைப் புலனாய்வாளர்கள் பெருமளவிலான நிதியை வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்கிருந்து தமிழர்களுக்கு வழங்கி புதுப்புதுக் கட்சிகள் ஆரம்பிக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்துவதற்காகவே புலனாய்வாளர்கள் இப்படிச் செய்கின்றனர். எனவே தமிழ் மக்கள் இந்த விடயத்தில் ஒற்றுமையாகச் செயற்படுவது காலத்தின் கட்டாயம்.

சுய நிர்ணய உரிமை என்பது பூமிப்பந்தில் வாழும் எந்த ஒரு தேசிய இனமும் தன்னைத்தானே ஆள்வதற்கு உரிமை கொண்டிருக்கின்றது. அது ஐ.நா சபை சரத்துக்களிலும் உள்ளது. அந்த அடிப்படையில் ஈழத் தமிழினம் தன்னைத்தானே ஆள்வதற்கு உரித்துக் கோரியது. அதை அடிமைத்தனமாக எங்கள் மேல் பல அடக்குமுறைகளைப் புகுத்தி சிங்கள தேசம் கொக்கரித்துக் கெண்டிருக்கிறது.

அரசதலைவர் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், கோத்தபாய ராஜபக்ச கூறுகின்றார், பொலிஸ் அதிகாரம் தரமுடியாது. அதில் பிரச்சினை இருக்கிறது. காணி அதிகாரம் தரமுடியாது. அதிலும் பிரச்சினை இருக்கிறது என்று. ஆனால் இந்த அரசு பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தில் ஒப்பமிட்டதை மறந்து விடக் கூடாது.

### தீர்வு தொடர்பில் சஜித் மௌனம்

அடுத்த அரசதலைவர் வேட்பாளர் என்று குறிப்பிடப்படும் சஜித் பிரேமதாச, தமிழர்களின் இனப்பிர்ச்சினைத் தீர்வு பற்றி இன்றுவரை ஒருவார்த்தை கூடப் பேசவில்லை.

### தீர்வு பற்றிக் கதைத்தால் சிங்கள வாக்குகள் குறையும்

எனவே இதிலிருந்து தெரியும், அவர்கள் எவரும் எங்களுக்கான உரித்துக்களைப் பற்றிச் சிந்திக்கக் கூடியவர்களாக இல்லை என்று. சிங்கள தேசத்தில் இருந்து உருவாகும் தலைவர்கள் தமிழர்களின் உரித்துக்களைப் பற்றிக் கதைத்தாலே சிங்கள மக்களிடமிருந்து தமது வாக்கு வங்கிக்குப் பாதகம் வந்துவிடும் என்று பயந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதன் காரணமாகவே தமிழர்களுக்குச் சாதகமாகப் பேச அவர்கள் பயப்படுகிறார்கள். இருந்தாலும் தமிழர்களாகிய நாங்கள் ஒன்றாக நிற்க வேண்டியவர்களாகத்தான் இருக்கின்றோம்.

வருகின்ற தேர்தலில் இரண்டு சிங்கள பேரினவாதிகள் நிற்கத்தான் போகிறார்கள். ஒருவரை நாங்கள் ஆதரிக்கத்தான் போகிறோம். ஒரு பேரினவாதியை ஆதரிக்கின்றோம் என்பதற்காக அவர்களின் பின்னால் மண்டியிட்டு போவதற்காக இல்லை என்பதை இப்போதே அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

எவரை நாங்கள் தெரிவு செய்தால், எமது மக்கள் சுதந்திரமாகவும் திருப்தியாகவும் வாழ முடியும் என்று நினைக்கின்றோமோ அவர்களுக்குத்தான் மக்கள் வாக்களிக்கப் போகிறார்கள். நாங்கள் சொல்லப் போவதில்லை. மக்கள் தீர்மானிப்பார்கள். ஆனால் சிங்களப் பேரினவாதிகள் எவரும் எம்மைப் பற்றிச் சிந்திக்கப் போவதில்லை என்பதும் எங்களுக்குத் தெரியும்.

### அடங்கிப் போகும் இனமல்ல

கடந்தகாலதுன்பங்களைமீட்டுப்பாருங்கள் பேரினவாதத்தின் கோர முகம் தெரியும். எமது இனம் அடங்கிப் போவதற்கான இனமல்ல. எமது தமிழ்மொழிக்காக எத்தனையோ நாடுகள் இருக்கின்றன. ஆனால் நாம் இந்த ஈழதேசத்தில் அடிமைகளாக அன்றி போராளிகளாக நிற்கின்றோம். உலகத் தமிழினத்துக்கு அடையாளமே ஈழத் தமிழினம்தான். எனவே நாங்கள் எதற்காக இங்கு போராடப் புறப்பட்டோமோ அந்தநோக்கத்தை அடையும் வரை தமிழினம் அமைதி கொள்ளப் போவதில்லை.

### இருக்கும் பலத்தை உருக்குலைக்காதீர்

நாங்கள் எமது உரிமை சார்ந்த விடயங்களில் அவதானமாக இருக்க வேண்டும். எமது பலத்தை உருக்குலைப்போமாக இருந்தால் நாங்கள் நாதியற்ற இனமாகப் போய்விடுவோம்.

### புலனாய்வுப் பிரிவால் புதிய கட்சிகள் உருவாக்கம்

இன்று இங்கிருக்கும் புலனாய்வுத் தரப்பினர் பணத்தை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்றனர். வெளிநாட்டிலுள்ள எம்மவர்கள் அந்தப் பணத்தை வைத்து விளையாடுகிறார்கள். அந்த பணம் ஒற்றுமையாக இருக்கும் தமிழினத்தை உருக்குலைப்பதற்காக அனுப்பப்படுகிறது. புதுப்புதுக் கட்சிகள் ஆரம்பிக்கப்படுகின்றன. புதிதாக அரசியல் பேசுபவர்களிடம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

இவ்வளவு நடந்தும் ஒரு முஸ்லிம் தமிழனுக்கோ சிங்களவனுக்கோ வாக்களித்துள்ளார்களா? ஆனால் நாங்கள் ஆயிரக்கணக்கில் திரண்டுவோம். கொடைவள்ளல் போல் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். நீங்கள் வேண்டுவதை வேண்டுங்கள் அவர்களை அழைத்து உபசரியுங்கள். உங்கள் வாக்குகளை இனிவருங்காலங்களில் வீணாக்குவீர்களாக இருந்தால் நாங்கள் நாதியற்ற தமிழினமாக மாறிப் போவதற்கு நீங்களே காரணமாகி விடுவீர்கள். எனவே தமிழ் மக்கள் ஒற்றுமையாகச் செயற்படுவது காலத்தின் கட்டாயம்- என்றார். (து-213)

# சமூகத்தில் போதையை ஒழிக்க விழிப்புணர்வுத் துண்டறிக்கைகள்

## கரைச்சிப் பிரதேச சபை விநியோகம்

கிளிநொச்சி, ஓக. 15

போதை ஒழிப்புச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையிலான விழிப்புணர்வுத்துண்டறிக்கைகளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் பல இடங்களில் விநியோகித்துள்ளனர்.

போதையற்ற கிராமங்களை உருவாக்குவோம் என்ற தவிசாளரின் எண்ணக்கருவுக்கு அமைய, குறித்த நிகழ்வு தவிசாளர் தலைமையில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. சபையின் உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் மக்கள் மத்தியில் போதையால் ஏற்படும் பாதிப்புகள், சீரழிவுகள் பற்றியும், அதிலிருந்து விடுபடும் வழி வகைகள் பற்றியும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்தினர் என்று தவிசாளரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)





# தொழில் முயற்சியாளர்களுக்கு வவுனியாவில் செயலமர்வு

வவுனியா,ஓக.15

தொழில் முயற்சியாளர்களுக்கான செயலமர்வு வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது. இலங்கை மத்திய வங்கியும் வடக்கு - கிழக்கு மாகாண தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப சம்மேளனமும் இணைந்து இந்தச் செயலமர்வை ஏற்பாடு செய்தன. காலை தொடக்கம் மாலை வரை இடம்பெற்ற செயலமர்வில் வர்த்தகர்கள், தொழில் முயற்சியாளர்கள், தொழில்நுட்ப முயற்சியாளர்கள், அரச மற்றும் தனியார் வங்கிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# கேப்பாப்பிலவு பகுதியில் குண்டுச் சத்தங்கள்

முல்லைத்தீவு, ஓக. 15

முல்லைத்தீவு, கேப்பாபிலவுப் பகுதியில் இரவு நேரங்களில் வெடிகுண்டுச் சத்தங்கள் கேட்கின்றன என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு 8 மணிக்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் குண்டு வெப்புச் சத்தம் கேட்டுள்ளது. மறுநாள் இரவு 9 மணியளவில் பல தடவைகள் குண்டு வெடிக்கும் சத்தங்கள் கேட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (து-ரி3)

# காய்க்கும் மாமரங்களை அழிப்பதற்கு சபை தடை

## கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம்

கிளிநொச்சி, ஓக. 15

கனி தரும் மாமரங்கள் அழிக்கப்படுகின்றமை தடுக்கப்பட வேண்டும் என்று கரைச்சிப் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை அமர்வு சபையில் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் உறுப்பினர் ஜீவன் இது பற்றிய தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

அதில், அண்மைக்காலமாக கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் கனிதரும் மாமரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இது உடனடியாக தடுக்கப்பட வேண்டும் தீர்மானத்தை முன்வைத்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளில் மாவட்டத்தின் அடையாளமாக இருக்கும் இத்தகைய மரங்கள் அழிக்கப்படுவதைப் பிரதேச அபிவிருத்திக்காக இந்த இடத்தில் இருக்கும் 35 உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து குறித்த தீர்மானத்தை நிறைவேற்றி மாமரம் அழிக்கப்படுவதைத் தடுக்க வேண்டும். எமது மாவட்டத்தை வளமான மாவட்டமாக உருவாக்கவேண்டும் என்றும் தனது உரையில் வலியுறுத்தினார்.

இதைச் சபையினர் ஏற்றுக்கொண்டனர்.

அது சபைத் தீர்மானமாக ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இது பற்றி மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்துக்கு எழுத்து மூலமாக அறிவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-6)

### பொதுத் தேவைக்கான காணியை தனியாருக்கு வழங்கவேண்டாம்

தலைமன்னார், ஓக. 15

சாந்திபுரம் கிராமத்தில் நீண்டகாலமாக பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட காணியில் பிரத்தியேக 2 நபர்களுக்குத் தலா 15 பேச் வீதம் பிரதேச செயலகத்தால் காணி வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழங்காது அத்தகைய காணிகளைப் பொதுத் தேவைக்கு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் மன்னார் பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் நகர் சாந்திபுரத்தில் பொதுத் தேவைக்கு ஒதுக்கிய காணிகள் எந்தவித முன்னறிவித்தல் மற்றும் காணிக் கச்சேரியின்றி அந்தக் கிராமத்தைச் சாராதவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனிடம் நேற்றுமுன்தினம் முறையிட்டுள்ளனர்.

சாந்திபுரத்தில் 500 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மக்களுக்குக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட போது ஓரிரு காணிகள் அந்தப் பகுதிக் கிராமத்தின் நலன் கருதி பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன.

இந்தப் பகுதியில் காணிகள் பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒவ்வொரு குடும்பத்துக்கும் தலா 8 பேச் காணிகளே வழங்கப்பட்டன.

தற்பொழுது பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த காணிகள் இந்தப் பகுதி சங்கங்களுக்கோ அல்லது பொது அமைப்புகளுக்கோ தெரியப்படுத்தாது வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் இன்னும் பலர் காணிகள் இன்றியுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலர் பொதுதேவைகளுக்கு ஒதுக்கப்பட்ட காணியை வேற்று பகுதி நபர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இதைத் தடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தி ருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-60)

## முத்துமாரிக்கு தேர்

வவுனியா. ஓக. 15

வவுனியா பண்டாரிக்குளம் அருள்மிகு சிறி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.

கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 14 ஆம் நாளான நேற்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. திருவிழாவின் தலைமைக் குரு சிவசிறி சதாசங்கரதாஸ் சிவாச்சாரியார் மற்றும் ஆலய தலைமைக் குரு சிவசிறி ராகுல சர்மா ஆகியோரின் தலைமையில் பூஜை வழிபாடுகள் நடைபெற்றன.

ஆலயத்தில் சிறப்புப் பூஜை வழிபாடுகள், அபிசேகங்கள் நடைபெற்று முத்துமாரி அம்மன் உள்வீதி உலா வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தார்.

நூற்றுக்கணக்கான பக்த அடியார்கள் வவுனியாவின் பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்து தேங்காய் அடித்தும், கற்பூரச் சட்டி ஏந்தியும், அங்கப்பிரதட்டை செய்தும், காவடி, தூக்குக் காவடி எடுத்தும் அடியார்கள் வழிபாடு செய்தனர். (த)





## மடு அன்னைக்கு இன்று திருவிழா

மன்னார், ஓக. 15

பிரசித்திபெற்ற மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவின் திருப்பலி இன்று காலை 6.15 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை நவ நாள் திருப்பலி இடம்பெற்று மெழுகுவர்த்தி பவனி இடம்பெற்றிருந்தது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதுகாப்புகுறித்துபல்வேறுஐயப்படுகள்காணப்படுகின்றபோதும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் அங்கு கூடியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரும் பதுளை மறைமாவட்ட ஆயருமான வணக்கத்துக்குரிய வின்சன் பொனாண்டோ ஆண்டகை பங்கேற்க, மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் ஏராளமான குருக்கள் இணைந்து இன்று காலை திருப்பலி ஒப்புக்கொடுக்க இருக்கின்றார்கள்.

அதனைத்தொடர்ந்து திருச்செரூபபவனியும், ஆசிரும் இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் மற்றும் படையினர் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மடுத் திருத்தலத்தின் ஆவணி மாதத் திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தது. தொடர்ந்து நவ நாள் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டுவந்தன. (த-56,60)

## வருடாந்த திருவிழா

ஏழாலை.ஓக.15

தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் நடைபெறவுள்ளன.

சிறப்பு திருவிழாக்களைத்தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 8.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி மு.ப 10 மணிக்கு ஸ்தம்ப பூஜை, 11 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை என்பன இடம் பெறும்.

மாலையில் 5.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி இரவு 7 மணிக்கு வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதியுலா வருதல் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும். நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-39)

✦ ✦ ✦

ஏழாலை.ஓக.15

மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா

எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன.

காலை, மாலை நடைபெறும் திருவிழாக்களில் காலை 8.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி 10.15 ஸ்தம்பபூஜைகளுடன் 11.15 மணிக்கு வசந்த மண்டபப் பூஜைகளும் நடைபெறும்.

மாலையில் 5.30 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி 6 மணிக்கு ஸ்தம்பபூஜைகளுடன் 7 மணிக்கு வசந்த மண்டபப் பூஜைகளும் நடைபெற்று விநாயகப் பெருமான் வீதியுலா வரும் காட்சிகளும் இடம்பெறும்.

விநாயகப் பெருமானின் தேர்த் திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத் திருவிழா 30 ஆம்ம திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கும் நடை

## ‘சட்டமும் சைவமும்’ சிறப்பு சொற்பொழிவு

வடமராட்சி, ஓக.15

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வுகள் வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ‘சட்டமும் சைவமும்’ என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இந்தச் சொற்பொழிவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டபீட மாணவன் எஸ்.சிவஸ்கந்தசிறி நிகழ்த்துவார்.

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள 5 மாணவர்களுக்கு ஈருருளிகள் வழங்கப்படும். இறுதியில் மகேஸ்வரப் பூசை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-173)

## அனலை. ஐயனார் ஆலய தேர் நேற்று

யாழ்ப்பாணம், ஓக. 15

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ். அனலைதீவு ஐயனார் ஆலய வருடாந்த மகோற்சவதேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது.

கடந்த 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பித்த மகோற்சவ திருவிழாக்கள் கடந்த 9 நாள்கள் நடைபெற்று நேற்றைய தினம் தேர்த்திருவிழா இடம்பெற்றது.

மு.ப10 மணியளவில் வசந்தமண்டப பூஜையை அடுத்து உள்வீதியுலா வந்த ஐயனார் நண்பகல் 12 மணியளவில் தேரில் ஆரோகணித்து பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார். (ம-37)



# சம்பந்தன் தெரிவித்த கருத்தால் அதிர்ச்சியடைந்தது அமெரிக்கா

## தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கு கேடு நேராதவாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானம் இருக்கும் என்று எதிர்பார்க்க கூடாது என்ற கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கருத்தால் அமெரிக்கா அதிர்ச்சியடைந்துள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அண்மையில் களுவாஞ்சிக்குடியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் தெளிவூட்டல் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் மத்திய மற்றும் தெற்காசியாவுக்கான உதவி இராஜங்க செயலர் எலிஸ் வேல்ஸ் அம்மையாரை சம்பந்தன் ஐயாவும் நானும் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

2011 ஆண்டு உங்களுடைய நாட்டுக்கு (அமெரிக்காவுக்கு) நாங்கள் வந்து பல்வேறு மட்டத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடி தீர்க்கமான முடிவு ஒன்று எடுத்திருந்தோம். அதனடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் 3 தீர்மானங்களை அமெரிக்கா கொண்டு வந்திருந்தது. அவற்றை இலங்கை அரசும் ஏற்றுக் கொண்டிருந்தது.

அவை தொடர்பாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்ற போதும், அவை எவையும் நிறைவு செய்யப்படவில்லை. முக்கியமாக மீளநிகழாமையை உறுதிப்படுத்துவதற்கான புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சிகள் முழுமைப்படுத்தப்படவில்லை. இவற்றையெல்லாம் எவ்வாறு முன்னகர்த்துவது என்று அமெரிக்க பிரதிநிதியிடம் சம்பந்தன் ஐயா கேட்டார்.

அதற்குப் பதிலளித்த அமெரிக்க உதவி இராஜங்க செயலர், தேர்தல் வருகின்றதல்லவா? அதில் எவ்வாறான கேடும் நேராதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அதை உடனடியாக மறுத்த சம்பந்தன் ஐயா, முடியாது - கேடு நிகழக் கூடாது என்பதற்காகச் செயற்பட்டு நாங்கள் களைத்துப் போய் விட்டோம். எதிர்காலத்தில் கேடு நிகழக் கூடாது என்பதற்காக மட்டும் எமது மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்பதையும் உறுதியாக தெரிவித்துவிட்டு எழுந்து சென்று விட்டார்.

சம்மந்தன் ஐயாவின் இந்த தீர்மானத்தால் உதவி இராஜங்க செயலர் எலிஸ் வேல்ஸ் அம்மையார் அதிர்ச்சியடைந்து விட்டார் - என்றார். (எ)



### ஐ.நா. பொதுச் சபை கூட்டத்துக்கு செல்கின்றார் மைத்திரிபால

கொழும்பு, ஓக.15

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் அமெரிக்கா பயணமாகவுள்ளார். அவர் அங்கு ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதுடன், பன்னாடுகளின் தலைவர்களுடன் முக்கிய சந்திப்புக்களை நடத்தவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அடுத்த மாதம் 17 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதில் கலந்து கொள்ள செல்லும் அரச தலைவர் தன்னுடன் முக்கியமான அமைச்சர்கள் சிலரையும் அழைத்துச் செல்லவுள்ளார்.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை வழங்குவது உட்பட்ட முக்கியமான விடயங்கள் தொடர்பான தனது நிலைப்பாட்டை அவர் ஐ.நா. பொதுச் சபையில் வெளிப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ)

## முச்சக்கர வண்டிகளின் ஆரம்பக் கட்டணம் 80 ரூபா?

கொழும்பு, ஓக. 15

இலங்கையின் முச்சக்கரவண்டிகளின் ஆரம்ப பயணக் கட்டணத்தை 80 ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயத்தை இலங்கை சுயதொழில் புரிபவர்களின் தேசிய முச்சக்கரவண்டிச் சங்க தலைவர் சுனில் ஜயவர்தன வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐ.ஓ.சி. ஆகியவற்றின் எரிபொருள்களின் விலைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள்களின் விலைகள் அதிகரிப்பானது முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளை பாதித்துள்ளது. இதனால் கட்டண மீற்றரை அகற்றிவிட்டு பயணிக்குமாறு சாரதிகளுக்கு அறிவிக்கவுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - இலங்கையில் பெருமளவானோர் முச்சக்கரவண்டிபயணிகளாக உள்ள நிலையில், முச்சக்கரவண்டிகளின் ஆரம்ப பயணக் கட்டணத்தை 80 ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளமையானது அவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஒ.5)

*ஆசிய பிராந்தியத்திலேயே*

## பலம் பொருந்திய கட்சி மொட்டுக் கட்சிதானாம்



கொழும்பு, ஓக். 15

ஆசிய பிராந்தியத்தில் சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு அடுத்து, இரண்டாவது இடத்தில், பொதுமக்கள் முன்னணி உள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபை தேர்தல்களில் பொதுமக்கள் முன்னணி 5 மில்லியன் வாக்குகளையும், சுதந்திரக் கட்சி 1.4 மில்லியன் வாக்குகளையும் பெற்றன. ஐக்கிய தேசி யக் கட்சி 3.4 மில்லியன் வாக்குகளை மட்டுமே பெற்றது.

பொதுமக்கள் முன்னணி அற்பமான கட்சி அல்ல. அது ஒரு வலுவான, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட கட்சி, டிஜிற்றல் தளங்களில் பெரும் செல்வாக்கு செலுத்துகிறது.

இந்தச் செல்வாக்கின் அளவைக் கொண்டு, இடதுசாரி முன்னணியின் அரச தலைவர் வேட்பாளரை நிறுத்தும் உரிமை பொதுமக்கள் முன்னணிக்கே உள்ளது.

கோத்தபாய ராஜபக்சவின் நியமனம் முறையாக அறிவிக்கப்படுவதற்கு முன்னர், மகிந்த ராஜபக்ச அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன், 2 மணி நேரம் கலந்துரையாடலை மேற்கொண்டனர். அது அனைவருக்கும் சாதகமாக முடிந்தது என்று இருவரும் தெரிவித்தனர் - என்றார். (ஒ.5)

### ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் இலங்கை வருகின்றார்

கொழும்பு, ஓக. 15

மதச் சுதந்திரம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் சிறப்பு அறிக்கையாளர் இலங்கை வரவுள்ளார். அவர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளார் என்றும்- அவர் எதிர்வரும் 26ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பார் என்றும்- தெரிவிக்கப்படுகின்றது.

அவர் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அரச மற்றும் எதிர்த் தரப்பினர் பலரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும்- தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### இலத்திரனியல் கொடுப்பனவுகளுக்கு புதிய வரி

கொழும்பு, ஓக. 15

கடனட்டை மற்றும் இலத்திரனியல் பணப்பரிமாற்ற அட்டைகளைப் பயன்படுத்தி பொருள்களைக் கொள்வனவு செய்யும் போது அதற்கு வரி அறிவிடுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கு வெளியே மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான கொடுப்பனவுகளுக்கே இந்த வரி அறிவிடப்படவுள்ளது.

அதற்கமைய கொடுப்பனவு செய்யும் தொகையில் 3.5 சதவீதம் வரியாக அறவிடுவதற்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இதனையடுத்து 2018ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க நிதிச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## சுற்றுலாத் தலமாகி வரும் வொலிவியன் கிராம வீடு

*தற்கொலைத் தாக்குதல் நடந்ததால் பார்வையிடுவதில் மக்கள் ஆர்வம்*

அம்பாறை, ஓக. 15

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது வொலிவியன் கிராமத்தில் ஏப்ரல் 26 ஆம் திகதி இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் சேதமடைந்த வீட்டை அன்றாடம் மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக வெளிமாவட்ட மக்கள் உள்ளூர் மக்கள் வீட்டைச் சென்று பார்வையிட்டு ஒளிப்படங்களும் எடுத்துச் சென்றுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பாண்டிருப்பு முதல் சாய்ந்தமருது வரை அதிகளவான இராணுவத்தினர் சோதனைக்காக குவிக்கப்பட்டிருந்த நிலையில் இராணுவ உயரதிகாரிகளின் சில குடும்ப உறுப்பினர்களும் குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த வீட்டை பார்வையிட முயற்சி செய்தமை குறிப்பிடத்தக்கது.

தாக்குதலுக்குள்ளான வீட்டை பார்வையிடுவதற்காக வரும் பொதுமக்கள், அருகில் உள்ளவர்களிடம் சம்பவம் தொடர்பாக கேட்டறிந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

குண்டுத்தாக்குதலுக்குள்ளான வீட்டை கண்காட்சி பொருளாக வெளிமாவட்டத்தில் உள்ள மக்களுக்கு சிலர் கூட்டிச்சென்று காட்டுவதாகவும், பணமும் அறவிட்டுள்ளதாக மற்றுமொரு குற்றச்சாட்டும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.5)

## அரச தலைவரை தெரிவு செய்து மீண்டும் குட்டு வாங்க முடியாது

### முத்துஹெட்டிகம எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15

அரசு மற்றும் அரச தலைவரைத் தெரிவு செய்த பின்னர் எம்மால் மீண்டும் குட்டு வாங்க முடியாது என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் நிசாந்த முத்துஹெட்டிகம.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியால் கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளராக அறிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு செயலராக கோத்தபாய ராஜபக்ச செயற்பட்டபோது அமைச்சர்களுடன் சிறந்த முறையில் செயற்பட்டிருக்கவில்லை. அரசியல்வாதியொருவர் இங்கு அரச தலைவர் வேட்பாளராக நிறுத்தப்படவில்லை.

கோத்தபாய என்பவர் முன்னாள் இராணுவ அதிகாரி மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலர். இராஜதந்திர உறவுகள் தொடர்பான தெளிவு மற்றும் பொதுமக்கள் தொடர்பு தொடர்பாக அவருக்கு எவ்வாறான சான்றிதழ் உள்ளது என்று எமக்கு தெரியாது.

மகிந்த ராஜபக்சவுடன் இரண்டு தேர்தல்களில் நாங்கள் இணைந்து செயற்பட்ட காலங்களில், கோத்தபாய எம்மை சந்திக்கும்போது சிறந்த முறையில் அவர் உறவுகளைப் பேணவில்லை. அவர் அரச தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவரை எம்மால் சந்திக்க முடியுமா என்றுகூட தெரியவில்லை.

அவ்வாறு என்றால், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை சந்திப்பதற்கு மாதத்தில் 15 நிமிடமாவது ஒதுக்கித் தருமாறு அவரிடம் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள வேண்டும். கதவை மூடிக்கொண்டால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. கதவை உடைத்தால் சிறைக்கு செல்லவே நேரிடும் - என்றார். (எ)

# கோத்தாவை 4 ஆண்டுகளாக ரணில்தான் பாதுகாத்தார்

## வாக்குக்காகவே லசந்தவின் பெயரை சொல்கிறார் என்கிறார் அவரின் மகள்

கொழும்பு, ஒக. 15

கடந்த நான்கு ஆண்டுகளாக கோத்தபாய ராஜபக்சவை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாத்து வந்துள்ளார். கடந்த காலத்தில படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பில் கோத்தபாய ராஜபக்ச மன்னிப்புக் கோருவாரா என்று கேள்வி எழுப்பும் நீங்கள், அவ்வாறானவரை பாதுகாத்தமைக்காக மன்னிப்புக் கேட்பீர்களா எனவும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர், சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் மகள் அகிம்சா விக்கிரமதுங்க குற்றஞ்சுமத்தியுள்ளார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் அனுப்பியுள்ள பகிரங்க கடிதத்தில் அகிம்சா விக்கிரமதுங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நீங்கள் உங்கள் அரசியல் உரையில் எனது தந்தையும் உங்கள் நெருங்கிய நண்பருமான லசந்த விக்கிரமதுங்க குறித்து சுட்டிக்காட்டியிருந்தீர்கள். அரசதலைவரானதும் அச்சமற்ற சூழலை ஏற்படுத்துவேன் என்று கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளமைக்கு பதிலளிக்கையிலேயே நீங்கள் எனது தந்தை குறித்துக் குறிப்பிட்டிருந்தீர்கள். எனது தந்தையினது கொலைக்காகவும் ஏனைய ஈவிரக்கமற்ற கொலைகளுக்காகவும் கோத்தபாய ராஜபக்ச மன்னிப்புக் கோருவாரா எனக் கேட்டிருந்தீர்கள்.

கோத்தபாய ராஜபக்ச எனது தந்தையின் கொலைக்கு ஒருபோதும் மன்னிப்புக் கோரமாட்டார். கடந்த பத்து ஆண்டுகளாக தொலைக்காட்சி பேட்டிகளில் எனது தந்தையின் கொலை குறித்து மகிழ்ச்சியடைவதை கோத்தபாய ராஜபக்ச பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார். கோத்தபாய ராஜபக்ச எனது தந்தையின் கொலைக்காக மன்னிப்புக் கோரப்போவதில்லை என்று தீர்மானித்து விட்டார்.

ஆனால் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, இன்று கொலையாளி என்று வர்ணிக்கும் அந்த நபரை கடந்த நான்கு ஆண்டுகளாகப் பாதுகாத்து, நன்கு கவனித்து வந்துள்ளார். அதற்காக ரணில் விக்கிரமசிங்க மன்னிப்புக் கோருவாரா? எனது தந்தை உயிரிழந்த நாள் முதல் அவரது பெயரை, வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தியுள்ளீர்கள். எனது தந்தையின் படுகொலை குறித்து விசாரணைகள் இடம்பெறும் என்று பரப்புரை முன்னெடுத்தே நீங்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் ஐக்கிய தேசியக் கட்சியையும் ஆட்சியில் அமர்த்தினீர்கள். ஆட்சிக்கு வந்ததும் உங்கள் முன்னுரிமைகள் மாறிவிட்டன. 2015 இல் அலரிமாளிகையில் எனது தந்தையின் படுகொலைக்கு காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும் என்று கோருவதற்காக உங்களை நான் சந்தித்தபோது, நீங்கள் வேறு முன்னுரிமைக்குரிய விடயங்கள் உள்ளன. நீதி என்பது லசந்தவுடன் மாத்திரம் தொடர்புடையது இல்லை என்று தெரிவித்திருந்தீர்கள்.

நீங்கள் அவரைப் படுகொலையாளி என்று கூறும் அதேவேளை உங்கள் குடும்பத்தவர்களும் உங்கள் மூத்த அதிகாரிகளும் கோத்தபாய ராஜபக்சவுடன் நட்பை தொடர்ந்தும் பேணி வருகின்றனர்.

நீங்கள் அரச தலைவராக அல்லது தலைமை அமைச்சராக வந்தாலும் இதுவரை காலமும் கோத்தபாய ராஜபக்சவுக்குச் சட்டத்தின்பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலை தடையின்றி தொடரும் என்று நிச்சயமாக நம்புகின்றேன்.

எனது தந்தையின் உயிரிழப்புக் குறித்து பெருமிதத்துடன் தம்பட்டம் அடித்த நபர் உத்தியோகபூர்வமாக அரச தலைவர் வேட்பாளர் ஆகியுள்ள நிலையில் துணிச்சலான, நேர்மையான அரசியல்வாதியொருவரே அவரை எதிர்க்கவேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# மக்கள் விரும்பும் வேட்பாளரை களமிறக்க வேண்டும் ஐ.தே.க.

## வேலுக்குமார் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக.15

சஜித் பிரேமதாச என்ற நாமமே இப்போது மக்கள் மத்தியில் ஓங்கி ஒலிக்கின்றது. மக்களால் கோரப்படும் வேட்பாளரைக் களமிறக்கி அரச தலைவர் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுக்குமார் தெரிவித்தார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட அரசியல் செயற்பாட்டாளர்களுடன் கண்டியில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்களத்தில் அரசதலைவர் தேர்தலானது முன்கூட்டியே சூடுபிடித்துள்ளது. இரு முனைப்போட்டிக்குப் பதிலாக இந்த முறை மும்முனைப் போட்டியே நிலவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி வேட்பாளராகக் கோத்தபாய ராஜபக்ச பெயரிடப்பட்டுள்ளார். சிங்கள, பௌத்த வாக்குகளைப் பெறுவதற்காக அவர்கள் இனவாத அரசியலைக் கையில் எடுக்கக்கூடும்.

அரச தலைவர் தேர்தலில் சிறுபான்மையின மக்களே தீர்மானிக்கும் சக்தி என்பதால் நாம் அனைவரும் விழிப்புடனும், பொறுப்புடனும் செயற்படவேண்டிய கட்டம் இதுவாகும். எம்மை அடக்கி ஆண்டவர்கள் எமது தலைகளைத் தடவி ஆசை வார்த்தைகளைக் கூறலாம். வாக்குறுதிகளை வாரிவழங்கலாம். ஆனால் கடந்து வந்த பாதையை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

2015 ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பொது வேட்பாளராக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டார். ஆனால் அந்தப் பயணம் நீடிக்கவில்லை. பல வழிகளிலும் அரசியல் குழப்பங்களை ஏற்படுத்தி விட்டுத் தற்போது மீட்பர் போன்று பாசாங்கு செய்கின்றார். அதனால் இறக்குமதி வேட்பாளரைப் பொது வேட்பாளராகக் களமிறக்கும் யுக்தி இனியும் மக்கள் மத்தியில் எடுபடாது. ஐக்கிய தேசியக்கட்சிக்கு மட்டுமல்ல அதற்கு ஆதரவு வழங்கிய தோழமைக் கட்சிகளுக்கும் பொது வேட்பாளரின் முடிவுகளால் பல நெருக்கடிகள் ஏற்பட்டன. அதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பொது மக்களால் கோரப்படும். இந்த முறை களமிறக்கவேண்டும்என்று கோரிக்கை விடுகின்றோம். கடந்த முறை போன்றல்ல இந்த முறைக் களநிலவரம். மக்கள் விடுதலை முன்னணியும் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கவுள்ளது. சுதந்திரக் கட்சியும் மாற்று நடவடிக்கையில் இறங்கக் கூடும். வெற்றியை நோக்கிப் பயணிப்பதற்குக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அதனால்தான் மக்கள் பக்கம் நின்று முடிவெடுக்க வேண்டும் என்று மீண்டும் மீண்டும் கோருகின்றோம். - என்றார். (எ)

# அரச தலைவர் தேர்தலில் சு.க. தனித்துப் போட்டியிடும்

## கூறுகிறார் அமரவீர

கொழும்பு, ஒக. 15



அரச தலைவர் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடும் சாத்தியம் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சி சார்பில் முன்வைக்கப்படும் யோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றோ, எங்கள் கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை என்றோ, அதிகாரம் இல்லை என்றோ கூற முடியாது. நாங்கள் தனித்துப் போட்டியிட்டு வெற்றியீட்டும் வல்லமை கொண்டவர்கள்.

அரச தலைவர் தேர்தலுக்கு நாங்கள் தயாராகவே இருக்கின்றோம். நாங்கள் முன்வைக்கும் யோசனைகளை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒதுங்கி நில்லுங்கள் என்று சொல்லப்பட்டால் நாங்கள் தனித்துப் போட்டியிடும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறான ஒரு சந்தர்ப்பம் ஏற்படாது என்றே நாங்கள் நம்புகின்றோம். பேச்சு மூலம் இதற்குத் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கின்றது.

கோத்தபாய ராஜபக்ச தொடர்பில் நாங்கள் எந்தவித தவறுகளையும் காணவில்லை. ஆனால் அவருடன் பேசவேண்டிய விடயங்கள் ஏராளம் உள்ளன.

இணக்கப்பாடு எட்டவேண்டிய விடயங்கள் உள்ளன. ஊழல், மோசடிகளை ஒழிப்பது, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் போன்று ஏராளம் விடயங்கள் குறித்துப் பேசி இணக்கப்பாட்டுக்கு வர வேண்டியுள்ளது - என்றார். (ஒ.5.21)

### சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சங்கமம் நிகழ்வு

வவுனியா, ஒக. 15

வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மற்றும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச்சங்கங்கள் இணைந்து நடத்தும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சங்கமம் நிகழ்வு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2மணியளவில் நடைபெறவுள்ளது.

சமாசத்தின் தலைவர் அ.ச. பாரதி ஆனந்தம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்டச் செயலர் எம்.ஜ. ஹனீபா, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான பொ. வாகீசன், இலங்கை சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத் தலைவர் கலாநிதி பி. ஏ. ஹிரிவந்தெனிய, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிராமிய பொருளாதார அபிவிருத்தி மூத்த விரிவுரையாளரும் கலாநிதி அகிலன் கதிர்காமர் ஆகியோர் உட்படமேலும் பல விருந்தினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தெரிவித்தது. (த)

### மண் சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழப்பு

பதுளை, ஒக.15

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானுஓயா நகருக்கு அண்மித்த பகுதியில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது. நானு ஓயாவைச் சேர்ந்த இரு பிளிளைகளின் தந்தையான மூ.இராஜேந்திரன் (வயது-33) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இவர் அந்தப் பகுதியில் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மண் சரிவு ஏற்பட்டு அதற்குள் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவரின் உடல் நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நானு ஓயாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# சம்பந்தனின் புதுடில்லிப் பயணம் சந்தேகம் எழுப்புகிறார் ஆனந்தன்



வவுனியா, ஓக. 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணிவேட்பாளரைத் தான் ஆதரிக்கப் போகிறது. புதுடில்லியில் சம்பந்தன் இராஜதந்திரிகளுடனும் பேச்சு நடத்துவார் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பினுடைய தலைவர் சம்பந்தன் தனது மருத்துவ சிகிச்சைக்காக புதுடில்லி சென்றிருக்கின்றார். அரச தலைவர் தேர்தல்ஒன்றுநடைபெறவுள்ள இந்தப் பரபரப்பான சூழ்நிலையில் அவருடைய மருத்துவ சிகிச்சை மட்டுமல்ல, எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் எவரை ஆதரிப்பதுபோன்ற விடயம் தொடர்பிலும் இராஜதந்திரிகள் மட்டத்தில் நிச்சயமாக பேசப்படும் என்று நான் நினைக்கின்றேன்.

2015ஆம் ஆண்டு இதே மாதிரியான அரச தலைவர் தேர்தல் ஒன்று நடைபெற இருந்த இறுதிக் கட்டத்தில்இரண்டுவாரகாலம் சம்பந்தன் சென்னையில் தங்கியிருந்தார். இதன் போது முன்னாள் அரச தலைவர் சந்திரிகா, மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் பொது வேட்பாளர் தொடர்பில் சில பேரம் பேசல்கள் இடம்பெற்றது. அவை தமிழ் மக்களுடைய நலன்சார்ந்த பேரம் பேசல்கள் அல்ல. தங்களுடைய தனிப்பட்ட நலன்கள் சார்ந்த பேரம் பேசல்களே நடைபெற்றன.

இரண்டு வார காலம் அங்கிருந்துவிட்டு, தபால் மூல வாக்கெடுப்பு நடைபெற்று, மறுநாள் இங்கு வந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய நான்கு பங்காளிக் கட்சிகளும் கொழும்பு ஜானகி ஹோட்டலில் வைத்து பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தி, மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பதாகக்கூறப்பட்டது. தமிழ் மக்களது அரசியல் உரிமைகள் குறித்து கடந்த தேர்தலில் பேரம் பேசலை தவிர்த்து தனிப்பட்ட நலனுக்காக பேரம்பேசல்கள் நடைபெற்று, அதற்குச் சில பிரதி உபகாரங்களும் செய்யப்பட்டன. தனிப்பட்ட பேரம் பேசல்களும், சுயநலங்களும் தமிழ் மக்களை நட்டாற்றில் விட்டுள்ளது.

அந்த அரச தலைவர் தேர்தலில் அன்றிலிருந்த இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடனும், அரச தலைவர் வேட்பாளர்களுடனும், எங்களுடைய மக்களின் நலன்சார்ந்து ஒரு உறுதிமொழியோ, உத்தரவாதமோ பெற்றுக்கொள்ளவில்லை. அப்படியொரு உடன்படிக்கை செய்வது என்று கேட்டபோது அரச தலைவர் அதனை மறுத்திருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய தேசிய முன்னணி அரசில் இருக்கின்ற வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க வையோ, அல்லது சஜித் பிரேமதாசாவையோ தான் நிச்சயமாக ஆதரிக்கப்போகிறது. கடந்த நான்கரை வருடகாலமாக இவர்களுக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஆதரவுக்காக ஐ.நா. மனிதவுரிமை சபையையும், இலங்கையில் இருக்கின்ற ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் ஏமாற்றியிருக்கிறார்கள்.

நான்கரை ஆண்டுகளாக தலைமை அமைச்சர், அரச தலைவர் ஏமாற்றிவிட்டார் என கூட்டமைப்பில் இருக்கக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவித்துள்ளனர். இவ்வாறு கூறிக்கொண்டு மீண்டும் இதே ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளரைத் தான் இவர்கள் ஆதரிக்கப் போகிறார்கள். எங்களைப் பொறுத்தவரை கடந்த தேர்தலில் உங்கள் தனிப்பட்ட நலனுக்கு பேரம் பேசியது போன்று அதாவது பணத்துக்காக நீங்கள் பேரம் பேசுவீர்களாகவிருந்தால் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் இவர்கள் அனைவரும் நிராகரிக்கப்படுவார்கள்.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவதாக இருந்தால் தமிழ் மக்களது அரசியல் தீர்வு தொடர்பாகவும், தேர்தல் காலத்தில் வழங்கப்படுகின்ற வாக்குறுதிகளை நிறைவேற்றுவது தொடர்பாகவும் வேட்பாளர்களிடத்தில் சரியான உறுதிமொழியைப் பெற்றுக் கொள்வதுடன் நில்லாது வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமிருந்தும்உறுதிமொழியைபெற வேண்டும். இதை விடுத்து கடந்த அரச தலைவர் தேர்தலில் செய்ததைப் போன்று நடந்து கொண்டால்அதற்குரிய விளைவை அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களிடம் இருந்து இவர்கள் பெற்றுக் கொள்வார்கள் - என்றார். (ஓ.5)

# மகிந்தவுடன் இணக்கப்பாடு என்ற தகவல் பொய்யானது

## *அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.15

முன்னாள் அரச தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்சவுடன் இணக்கப்பாடு எதுவும் ஏற்படவில்லை. அவருடன் இணக்கப்பாடு காணப்பட்டது என்று வெளியான தகவல்கள் தவறானவையாகும். இவ்வாறு மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் செயலகத்தில் நேற்றுமுன்தினம் காலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. அதன்போது சிறுபான்மையினக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் ஒருவர் அரச தலைவரிடம் இந்த விடயம் தொடர்பாக வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது.

மகிந்த ராஜபக்சவுடன் நீங்கள் நடத்திய சந்திப்பின் போது சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியில் அரச தலைவர் வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிப்பதற்கான இணக்கம் காணப்பட்டது என்றும் - அதற்கு பிரதி உபகாரமாக உங்களுக்கு உரிய பதவியை தருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் - ஆங்கிலப் பத்திரிகையொன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறான இணக்கம் காணப்பட்டுள்ளதா? பொதுஜன பெரமுன வேட்பாளரை நீங்கள் ஆதரிக்கப்போகின்றீர்களா? என்று அந்த அமைச்சர், அரச தலைவரிடம் கேட்டுள்ளார்.

அதற்குப் பதிலளித்த அரச தலைவர், அவ்வாறான இணக்கப்பாடு எதுவும் ஏற்படவில்லை. அவ்வாறு வெளியான தகவல்கள் தவறானவை. அதை நம்ப வேண்டாம் என்று தெரிவித்துள்ளார்.



சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கு நீங்கள் ஆதரவு வழங்காது, எமது கூட்டணிக்கு ஆதரவை வழங்கவேண்டும் என்று அந்த அமைச்சர் கோரினார் என்றும் - ஐக்கிய தேசிய முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட்டால், இந்த விடயத்தில் நடுநிலைமை வகிப்பது தொடர்பாகப் பரிசீலிக்க முடியும் என்று அரச தலைவர் பதிலளித்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்து. (எ)

## இடைக்கால கணக்கறிக்கையை சமர்ப்பிக்க அனுமதி

கொழும்பு, ஓக.15

2020ஆம் ஆண்டுக்கான முதல் காலாண்டில் அரச செலவினங்களை ஈடு செய்வதற்காக இடைக்கால கணக்கறிக்கையை சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரைக் கூட்டத்தின்போது நிதி யமைச்சர் மங்கள சமரவீரவால் இந்த விடயம் தொடர்பான அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட் டுள்ளது.

இந்த வருட இறுதியில் அரச தலைவர் தேர்தல் இடம்பெறவுள்ளமை மற்றும் அடுத்த வருடத்தில் மேலும் சில தேர்தல்கள் இடம்பெறவுள்ளமை காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

## காஷ்மீரில் நடப்பது என்ன?

### *மகிந்தவுக்கு விளக்கமளித்தார் இலங்கைக்கான பாக். தூதுவர்*

கொழும்பு, ஓக. 15

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் சாஹிட் அஹமட் ஹஸ்மத், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சலைச் சந்தித்து, ஜம்மு காஷ்மீர் நிலமைகள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, காஷ்மீரின் தற்போதைய நிலமைகள் குறித்து மகிந்த ராஜபக்சவுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளதாக, கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்திய அரசமைப்பின் 370 ஆவது பிரிவை இல்லாமற்செய்வதன் மூலம் ஜம்முகாஷ்மீரின் சிறப்புத் தகுதியை நீக்க இந்தியா மேற்கொண்ட ஒருதலைப்பட்ச நடவடிக்கைகள் பன்னாட்டுச்சட்டத்தை முற்றிலும்மீறுவதாகஅமைந்துள்ளதுஎன்று மகிந்த ராஜபக்சவிடம் பாகிஸ்தான் தூதுவர் தெரிவித்துள்ளார்.

இது பன்னாட்டு அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்ச்சைக்குரிய பிரதேசம் என்பதால், ஜம்முகாஷ்மீரின் சனத்தொகைப் பரம்பலை மாற்ற முற்படும் எந்தவொரு நடவடிக்கையையும் பாகிஸ்தான் கடுமையாக எதிர்க்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைகள் இப்பகுதியில் நிலமையை தீவிரமாக்கும் சாத்தியங்களைக் கொண்டுள்ளது என்றும்-பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பில் கடுமையான தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் - பாகிஸ்தான் தூதுவர் தெரிவித்துள்ளார். அத்துடன், தெற்காசியாவில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கு சார்க் நாடுகளிடையே ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். (ஓ.5)

## 45,514 பேர் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள்

கொழும்பு, ஓக. 15

நாட்டில் தற்போது பதிவு செய்யப்பட்ட குற்ற வாளிகள் 45 ஆயிரத்து 514 பேர் உள்ளனரென்றுபொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இதில் ஆயிரத்து 108 பேர் பெண்கள் உள்ளடங்கியுள்ளனர்.

குற்றங்களைத் தடுப்பதற்கான கட்டளைச் சட்டத்தின் உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்கமைய, இரண்டு சந்தர்ப்பங்கள் அல்லது அதற்கு மேலதிகமான சந்தர்ப்பங்களில் குற்றவாளியாகவும் ஒரு சந்தர்ப்பம் அல்லது அதற்கு மேலதிகமான சந்தர்ப்பங்களில் சிறைத் தண்டனைஅனுபவித்தவர்கள் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகளெனக் கருதப்படுவரென்றும்பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நபர்களின் பெயர்ப்பட்டியல் நாட்டிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் வைக்கப்பட்டிருக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள்தம்மை அந்தப் பட்டியலிலிருந்து விடுவித்துக்கொள்ள 70 வருடங்கள் தொடர்ச்சியாக அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென்றும் அவ்வாறு இல்லையாயின், குறித்த குற்றவாளிகள் இறந்த பின்னும் அவர்களின் பெயர்கள் குற்றவாளிகளின்பட்டியலிலிருந்து நீக்கப்படாதென்றும்அவர் தெரிவித்துள்ளார். (ஓ.5)

# வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு அரச சேவைப் பயிற்சி விரைவில்

## *செயலர் அசங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 15

வேலை வாய்ப்பற்ற அனைத்து வெளிவாரிப் பட்டதாரிகளையும் அரச சேவைக்கான பயிற்சிகளில் இணைத்துக் கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதன் முதற்கட்டமாக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற 2 ஆயிரத்து 500 வெளிவாரிப் பட்டதாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக பொருளாதார விவகார மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மேலதிக செயலர் அசங்க தயாரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த மாத இறுதிக்கு முன்னர் அவர்களுக்கான நியமனங்களும் வழங்கப்படும். 2017 ஆம் ஆண்டு வரை, 20 ஆயிரம் பேர் வெளிவாரிப் பட்டம் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

வெளிவாரிப் பட்டதாரிகளை அரச சேவைக்கான பயிற்சிகளுக்காக இணைத்துக் கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வேலையற்ற பட்டதாரிகள் கொழும்பில் பல்வேறு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்திருந்தனர். (ஓ.5)

# எதிரணியை கருத்தில் கொண்டு வேட்பாளரை தெரிவு செய்யோம்

## கொள்கை, அபிவிருத்திக்கே முதலிடம் அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவிப்பு

கொழும்பு, ஓக.15

எதிரணி வேட்பாளரை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரைத் தீர்மானிக்காது. நிலையான கொள்கை மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்களை மையப்படுத்தியே எமது தெரிவு அமையும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தங்கள் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளாரே என்று அவரிடம் வினவப்பட்டபோது, எமது நாட்டில் சுதந்திரமாக கருத்துக்களைத் தெரிவிக்கவும் நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதற்குமான சுதந்திரம் உள்ளது. ஜனநாயக முறைமையில் எனக்கு நம்பிக்கையான நிலைப்பாட்டில் இருப்பதற்கான உரிமையும் சகலருக்கும் உள்ளது என்று சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலானவர்கள் உங்களை அரச தலைவர் வேட்பாளராக களமிறக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள். ஆனால் கட்சியின் முக்கியஸ்தர்கள் ஏன் உங்களை வேட்பாளராக களமிறக்க ஆதரவு வழங்க மறுத்து வருகிறார்கள் என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, அவர் உண்மை என்றாவது வெல்லும் என்று பதிலளித்தார்.

அரச தலைவர் வேட்பாளர் எவர் என்பதை கட்சி அடையாளம் கண்டுள்ளதா? என்று சஜித் பிரேமதாசவிடம் கேட்கப்பட்டபோது, அது தொடர்பான சகல விடயங்களும் எதிர்காலத்தில் வெளியாகும் என்று அவர் கூறினார்.

உங்களை அரச தலைவராக வேட்பாளராக களமிறக்குவதற்கு இடமளிக்காவிட்டால் தனித்துச்செயற்படுவோம் என்றே நிலைப்பாட்டிலேயே கட்சியில் அனேகமான உறுப்பினர்கள் இருக்கிறார்களா? என்று அவரிடம் கேட்கப்பட்டபோது, நான் எதனையும் எதிர்மறையாகச் சிந்தித்துச் செயற்பட விரும்புவதில்லை. நேர்மையான முறையில் செயற்பட்டு எதிர்காலத்தை நோக்கி பயணிப்பதே எனது எதிர்பார்ப்பாகும். நேர் மறையான சிந்தனைகளை முறையாக கடைப்பிடிப்பவனாக இருந்து வருகிறேன் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

## இரு தேர்தல்களையும் அண்மித்த திகதிகளில் நடத்துவதே சிறந்தது

### பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

மாகாண சபைத் தேர்தலையும், அரச தலைவர் தேர்தலையும் ஒன்றுக்கொன்று அண்மித்த திகதிகளில் நடத்த வேண்டும். இல்லாவிட்டால் ஒரு தேர்தலின் முடிவு மற்றைய தேர்தலின் முடிவில் தாக்கம் செலுத்தும் நிலமை ஏற்படும்.

இவ்வாறு தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்ச்சியாகக் காலம் தாழ்த்தப்பட்டு வருகின்றமை மற்றும் அரச தலைவர் தேர்தல் காலம் நெருங்கியுள்ள நிலையில் சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தலை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயற்படும் பவ்ரல் அமைப்பு நேற்று புதன்கிழமை மருதானையிலுள்ள சமூக, சமய நடுநிலையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சியே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டைப் பொறுத்தவரை தேர்தல் செலவினங்களை வரையறுக்கும் சட்டங்கள் எவையும் இயற்றப்படாமை நியாயமான தேர்தல் நடைமுறையைப் பாதிக்கின்றது. தேர்தல்களின் போது மேற்கொள்ளப்படும் செலவுகள் தொடர்பில் வரையறைகளை ஏற்படுத்துவதற்குரிய சட்டவரைவு ஒன்றைத் தயாரித்திருக்கின்றோம். - என்றார். (எ)

## கோத்தாவுக்கு ஆதரவு வழங்கவே முடியாது

### முன்னாள் ஆளுநர் அசாத் சாலி காட்டம்



கொழும்பு, ஓக. 15

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்கமாட்டோம் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் எந்த வேட்பாளரும் 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற முடியாது. இரண்டாம், மூன்றாம் சுற்று வாக்குகளை எண்ண வேண்டியிருக்கும்.

கோத்தபாய ராஜபக்ச முன்வந்து, கீத் நொயரை தாக்கவில்லை. லசந்த விக்ரமதுங்கவைக்கொல்லவில்லை. ரத்துபஸ்வெலவில் தண்ணீர் கேட்டவர்களை ராஜபக்சவினர் கொல்லவில்லை என்று உறுதியளிக்க முடியுமா?

கோத்தபாய ராஜபக்ச காலிமுகத்திடல் நிலங்களை சங்ரிலாவுக்கு விற்றபோது, அவரை எதிர்க்க எவருக்கும் தைரியம் இருக்கவில்லை- என்றும் அவர் கூறினார். (ஒ.5)

## சஜித்- கோத்தாவை மோதலில் சிக்க வைக்கும் இணைய முடக்கிகள்

அரச தலைவர் தேர்தலில் நேரடியாக மோதுவார்கள் என்று எதிர்பார்க்கப்படும் கோத்தபாய ராஜபக்சவையும், சஜித் பிரேமதாசவையும், இணைய மோதலுக்குள் சிக்க வைத்துள்ளனர் இணையத்தள முடக்கிகள்.

சஜித் பிரேமதாசவின் பெயரில் உள்ள, www.sajithpremadasa.com என்ற இணையத் தளத்துக்குள் நுழைவோர், கோத்தபாய ராஜபக்சவின் பெயரில் உள்ள, www.gota.lk என்ற இணையத்தளத்துக்கு தானாகவே கொண்டு செல்லப்படுகிறார்கள்.

அதுபோல, கோத்தபாய ராஜபக்சவுக்காக பரப்புரைகள் செய்யப்படும், http://www.gota.lk என்ற இணையத் தளத்துக்குள் நுழைவோர், சிறிலங்கா சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரபூர்வ வலைத்தளமான http://www.prisons.gov.lk இற்குள் கொண்டு செல்லப்படுகின்றனர்.

இணையத்தள முடக்கிகளில் இந்த சதி வேலை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், www.sajithpremadasa.com என்ற இணையத்தளம் தங்களால், இயக்கப்படவில்லை என்று அமைச்சர் சஜித் பிரேமதாசாவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த தளத்துடன் எங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை, என்ன நடந்தது என்பது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது. இருப்பினும், நாங்கள் விரைவில் ஒரு புதிய அதிகாரப்பூர்வ தளத்தை தொடங்கவுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

அமைச்சர் சஜித் பிரேமதாசாவின் விவரக்குறிப்பில் இது தாக்கத்தை ஏற்படுத்துவதால் இது தொடர்பாகத் தேவையான நடவடிக்கை எடுத்து ஆராயப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

எனினும், கோத்தபாய ராஜபக்சவின் பெயரில் உள்ள இணையத் தளத்துக்குள் நுழைவோர், சிறைச்சாலைத் திணைக்களத்தின் வலைத்தளத்துக்குள் அனுப்பப்படுவது குறித்து கோத்தபாய ராஜபக்ச தரப்பின் கருத்து உடனடியாக வெளியாகவில்லை.

## வானூர்தி நிலையங்களை அண்மித்து பட்டம் பறக்க விடுவதற்குத் தடை

கொழும்பு, ஓக. 15

நாட்டிலுள்ள பன்னாட்டு மற்றும் உள்ளக வானூர்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளில், 5 கிலோமீற்றர் வரையான உயரத்துக்குப் பட்டங்களைப் பறக்கவிடுவது சட்டவிரோதமானதும் தண்டனைக்குரிய குற்றமுமாகும் என்று கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் முகாமையாளர் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையம், மத்தளை மகிந்த ராஜபக்ச வானூர்தி நிலையம், இரத்மலானை, பலாலி, சிகிரியா, கொக்கல உள்ளிட்ட வானூர்தி நிலையங்களுக்கும் இந்த நடைமுறை செல்லுபடியாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த வானூர்தி நிலையங்களை அண்மித்த பகுதிகளிலிருந்து விடப்படும் பட்டங்கள் மற்றும் நூல், ஜெட் வானூர்திகளின் இயந்திரங்கள் உள்ளிட்ட வானூர்திப் பாகங்களில் சிக்குண்டு விபத்துக்கள் ஏற்படக்கூடும் என்று கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தின் முகாமையாளர் ஹெட்டியாராச்சி சுட்டிக்காட்டியுள்ளார். (ஒ.5)

## சில விடயங்களில் அரசு மீது இலங்கை மக்கள் அதிருப்தி

### ஜேம்ஸ் டோரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.15

சிறந்த ஆட்சி நிர்வாகம் மற்றும் வெளிப்படைத் தன்மை உள்ளிட்டவற்றை மேம்படுத்துவதற்குக் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவில்லை என்ற அதிருப்தி இலங்கை மக்கள் மத்தியில் காணப்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டோரிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் பதவியில் இருந்து ஜேம்ஸ் டோரிஸ் விடைபெறவுள்ள நிலையில் தொலைக்காட்சி அலைவரிசை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

சமாதானம் மற்றும் நல்லிணக்கம் போன்ற விடயங்களில் அரசால் சில முன்னேற்றகரமான நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. தகவல் அறியும் உரிமையை அடிப்படை உரிமையாக்குவதற்கு அரசமைப்பில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடலாம்.

தற்போதைய நவீன பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கு பன்னாடுகளுடன் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகும். அதனடிப்படையில் புலனாய்வுத் தகவல்களை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளத்தக்க வகையில் நாட்டுக்குள் வெவ்வேறு புலனாய்வு முகவர் நிலையங்களை உள்ளடக்கியதாக ஏற்படுத்தப்பட வேண்டிய கட்டமைப்பு மாற்றங்கள் அவசியம்.

உரிய தருணத்தில் தேர்தல்களை நடத்துவது நாடொன்றின் ஜனநாயக செயற்பாட்டில் முக்கியமான விடயமாகும். மாகாண சபைத் தேர்தல்கள் தாமதிக்கப்படுகின்றமை கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும் - என்றார். (எ)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

## பொறுப்புக்கூற வேண்டியவர்களை நீதியின் முன் கொண்டு வாருங்கள்

### இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை வலியுறுத்து

கொழும்பு, ஓக.15

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் நீதியின் முன் கொண்டுவரப்பட வேண்டும் என்று இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

அந்தப் பேரவை நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

நீதி நேர்மையுடனான, பக்கசார்பற்ற விசாரணைகளை மேற்கொள்வது காலத்தின் கட்டாய தேவையாக இருக்கின்றது. நீதியையும் சமத்துவத்தையும் நிலைநாட்டுவதோடு, தாக்குதலுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அனைவரையும் நீதியின் முன்னால் கொண்டுவர வேண்டும் - என்றுள்ளது.


கடந்த ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு தினமான 21ஆம் திகதி இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் 250க்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். (எ)

# இந்திய இராணுவத்தினர் மீது காஷ்மீரில் கல்லெறித் தாக்குதல்

## சமூக விரோதிகளின் செயல் என்கிறது இந்தியா


புதுடெல்லி,ஓக.15

காஷ்மீரின் சௌராப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இந்திய சிப்பாய்கள் மீது கல்லெறித்தாக்குதல் நடத்தப்பட்டது.



ஜம்மு காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு அரசமைப்பை நீக்கி ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரண்டு பிரதேசங்களாக்கிய இந்தியஅரசின்செயலைக்கண்டித்தே இந்தக் கல்லெறித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்திய அரசின் இந்தச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ள காஷ்மீர் மக்கள். இந்திய அரசு மீது கோபத்தில் இருக்கின்றனர். இதனால் அந்தப் பகுதியில் அசாதாரண சூழ்நிலை நிலவி வருகிறது. கடந்த 9ஆம் திகதி இந்திய அரசுக்கு எதிராக மக்கள் சிறீநகரில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் போராட்டத்தின்போதே மக்கள் இராணுவத்தினர்மீதுகல்லெறிநடத்தினர். உள்ளூர் மக்களுடன் இணைந்த சமூகவிரோதிகள்அங்குஅமைதியின்மையை ஏற்படுத்துவதற்காகப் பாதுகாப்புப்பணியில்ஈடுபட்டிருந்தசிப்பாய்கள்மீதுகல்லெறிந்துதாக்குதல்நடத்தினர் என்று இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.



அமெரிக்காவின் லோவா மாநிலத்தில் இடம்பெற்ற ஆடு அடக்கும் போட்டி ஒன்றில் சிறுவன் ஒருவன் ஆட்டை அடக்கிய காட்சி இது.

## நிலவை நெருங்கும் சந்திரயான் – 2

புதுடெல்லி,ஓக.15

நிலவின் தென் பகுதியை ஆராய்வதற்காக இந்தியாவின் இஸ்ரோ விண்வெளி நிலையத்தால் ஏவப்பட்ட சந்திரயான் - 2 விண்கலம் பூமியின்சுற்றுவட்டப்பாதையில் இருந்து நீக்கப்பட்டு , நிலவின் சுற்று வட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது என்று இஸ்ரோ தெரிவித்தது.

கடந்த மாதம் 22ஆம் திகதி ஏவப்பட்ட சந்திரயான் - 2 இதுவரை பூமியின்சுற்றுவட்டப்பாதையில் சுற்றிவந்தது.

இந்தநிலையிலேயேஅதுநேற்று அதிகாலை நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள்பயணிக்கச்செய்யப்பட்டது.

திட்டமிட்டபடிஎதிர்வரும்செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி சந்திரயான்-2நிலவில்தரையிறங்கும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்தனர்.

## நளினி - முருகன் சந்திப்பு

புதுடெல்லி,ஓக.15

இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி, முருகன் (நளினியின் கணவர்) , சாந்தன், பேரறிவாளன் உள்ளிட்ட ஏழுபேருக்குத் தண்டனைவிதித்தது இந்திய உச்ச நீதிமன்றம். ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு வேலூர்ப் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நளினி, தனது மகளின் திருமணத்துக்காக, ஒரு மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். சத்துவாச்சாரியில் தங்கியுள்ள அவர் தினமும் சத்துவாச்சாரி பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டு வருகிறார். சிறையில் இருக்கும்போது நளினி 15 நாள்களுக்கு ஒரு முறை முருகனைச் சந்தித்துப் பேசுவது வழக்கம். நளினி பிணையில் வெளிவந்த பின்னர் அந்தச் சந்திப்புக்குப் பொலிஸார் அனுமதிக்கவில்லை.





இந்தநிலையில்மகளின்திருமணஏற்பாடுகள் குறித்து முருகனுடன் பேச வேண்டியதுள்ளதால் முருகனைச் சந்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சிறை உயர் அதிகாரிகளுக்கு நளினி மனு அனுப்பினார். இதையடுத்து நேற்று நளினி முருகன் சந்திப்புக்குஏற்பாடுசெய்யப்பட்டது. வேலூர்ச் சிறையில் இந்தச் சந்திப்புஒரு1மணிநேரம்இடம்பெற்றது.

## இன்றைய நாள்

**மேடம்:** பணிகள்நிறைவேறமுன்னேற்பாடு செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலம் பிறரிடம் சொல்ல வேண்டாம். கூடுதல் பணவரவில், குடும்ப தேவை நிறைவேறும். வீட்டில்ஒற்றுமைமகிழ்ச்சி அதிகரிக்கும்.

**இடபம்:** உங்கள் மனதில் குழப்பம் ஏற்படலாம். நல்லோரின் ஆலோசனை, நன்மை பெற உதவும்.தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும்.மாணவர்கள், சிறந்த தேர்ச்சி பெற கூடுதல் பயிற்சி மேற்கொள்ளவும்.

**மிதுனம்:** உறவினரின் பாசம் வியப்பைத் தரலாம்.தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது அவசியம்.குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** இனிய வார்த்தை பேசுவீர்கள். வாழ்க்கைத் தரம் வியத்தகு அளவில் உயரும். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற நண்பர்களின் உதவி கிடைக்கும். பணப்பரிவர்த்தனை முன்னேற்றம் பெறும்.

**சிம்மம்:** வாழ்வில் முன்னேற்றம் பெற புதிய வாய்ப்பு உருவாகும்.உண்மை, நேர்மைக்கு முக்கியத்துவம் தருவீர்கள். தொழில், வியாபாரம் அபரிமிதமான அளவில் வளர்ச்சி பெறும்.

**கன்னி:** குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதம் பேசக்கூடாது.சுயலாபத்திற்காக சிலர் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** உங்கள் பேச்சும் செயலும் மாறுபடலாம்.நண்பரின் வழிகாட்டுதல் நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும்.அத்தியாவசிய செலவுகளுக்கு முன்னுரிமை தருவீர்கள். உணவுப்பொருள் தரமறிந்து உண்ணவும்.

**விருச்சிகம்:** உங்களின் அணுகுமுறை மாற்றம் நல்லபலன் தரும்.அக்கம் பக்கத்தவர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படும். பணவரவு திருப்திகரமாகும்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம்பொது விஷயம் பேச வேண்டாம்.தொழிலில் உருவாகிற சிரமங்களை சரிசெய்வது அவசியம்.பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**மகரம்:** உங்கள் நற்செயல் நண்பரிடம் பாராட்டு பெறும்.தொழிலில் அதிக உழைப்பினால் புதிய சாதனைபுரிவீர்கள். உபரி பணவரவு சேமிப்பாகும்.. மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**கும்பம்:** சொந்தப்பணிகளை நிறைவேற்ற ஆர்வம் கொள்வீர்கள். நண்பர், உறவினரை குறை சொல்ல வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.

**மீனம்:** ஒருமுகத் தன்மையுடன் செயல்படுவீர்கள்.தாமதமாகிய பணி எளிதில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். அதிக அளவில் பணவரவு கிடைக்கும். புத்திரரின் நற்செயல், மனதை மகிழ்விக்கும்.

# ஹொங்கொங் படுகுழிக்குள் தள்ளப்படும்

### கேரி லொம் எச்சரிக்கை



ஹொங்கொங்,ஓக.15
நீங்கள் நடத்தும் போராட்டம் மூலமாகக் ஹொங்கொங் மீண்டு வரமுடியாத படுகுழிக்குள் தள்ளப்பட்டு விடும் என்று ஹொங்கொங்கின் நிர்வாகத் தலைவர் கேரி லொம் எச்சரிக்கை விடுத்தார். ஹொங்கொங்கில் போராட்டம் அதிகரித்து வருகிறது. 10ஆவது வாரத்தை எட்டியுள்ள இந்தப் போராட்டங்களில் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே வன்முறைகள் ஏற்பட்டன. இந்த நிலையில், போராட்டம் மூலமாகக் ஹொங்கொங் மீண்டு வரமுடியாத படுகுழியில் தள்ளப்பட்டு விடும் என்று கேரி லொம் எச்சரிக்கை விடுத்தார். போராட்டம் தொடர்பாக நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அந்தச் சந்திப்பின்போது போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையான கைதிகள் பரிமாற்றத் தீர்மானத்தைத் திரும்பப் பெறுவது குறித்துச் செய்தியாளர்கள் தொடுத்த கேள்விக்கு கேரி லொம் பதில் அளிக்க மறுத்தார்.

# ஹொங்கொங்கில் மோசமான நிலை நீடிப்பு

### கவலை தெரிவித்தார் ட்ரம்ப்

வோஷிங்டன்,ஓக.15
ஹொங்காங்கில் மோசமான நிலை நீடிப்பதாக அமெரிக்க அரச தலைவர் ட்ரம்ப்கவலைதெரிவித்தார். ஹொங்கொங்கில் அரசுக்கு எதிரான போராட்டங்களில்பொலிஸார் பெட்றோல் குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தியதில் போராட்டக்காரர்கள் பலத்த காயம் அடைந்தனர்.



இந்தநிலையில்கடந்தசெவ்வாய்க்கிழமைஅங்குவானூர்தி நிலையத்தில் போராட்டக்காரர்கள் பேரணியில் ஈடுபட்டனர்.
அங்கும் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையேமோதல்ஏற்பட்டது. இந்தநிலையிலேயேஹொங்கொங்போராட்டம் குறித்துக் கவலை தெரிவித்தார் ட்ரம்ப்.



ஹொங்கொங் வானூர்தி நிலையத்தில் நடந்த போராட்டத்தின்போது பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளாகிக் காயமடைந்தபோராட்டக்காரர்களைக் குறிக்கும் ஒளிப்படமே இது. பன்னாட்டு ஊடகமான 'ரெய்டர்ஸ்' இதை வெளியிட்டது.

### ஹொங்கொங் விவகாரம்

# போராட்டம் காரணமாக முடங்கிய வானூர்தி நிலையம் மீள இயக்கம்

*ஹொங்கொங்,ஓக.15
ஹொங்கொங்கில்வானூர்தி நிலைய வளாகத்தில் நடைபெற்று வந்த போராட்டம் தணிந்தது. அதனால் அந்த வானூர்தி நிலையத்தின் சேவைகள் வழமைக்குத் திரும்பின.*



ஹொங்கொங் பன்னாட்டு வானூர்தி நிலையத்தை முற்றுகையிட்டுப் போராட்டக்காரர்கள் தொடர் போராட்டம்நடத்திவந்தனர்.
இதன் காரணமாகக் கடந்த இரண்டு நாள்களாக வானூர்திச் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட வானூர்திகளின் பயணங்கள் தடைப்பட்டன. போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. இந்த நிலையில், நேற்றுக் காலை பெரும்பாலான போராட்டக்காரர்கள் வானூர்தி நிலைய வளாகத்தை விட்டுவெளியேறினர். இதையடுத்து வானூர்திச் சேவைகள்மீண்டும்தொடங்கின. சில போராட்டக்காரர்கள் வானூர்தி நிலையத்துக்குள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால், பொலிஸார் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**பின்னணி**
சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின்கைதிகளைச்சீனாவுக்கு நாடுகடத்துவதான சட்ட திருத்த தீர்மானம் ஒன்றைக் ஹொங்கொங் நிர்வாகம் கொண்டு வந்தது. இதற்கு எதிராகக் கடந்த 10 வாரங்களாகக் ஹொங்கொங் மக்கள் போராட்டம் நடத்திவருகின்றனர்.
அமைதிப் பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள்என்பனஹொங்கொங்மக்களால் பரவலாகமுன்னெடுக்கப்படுகின்றன. இந்தப் போராட்டங்களின்போது. பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே வன்முறைகளும் நடந்தேறுகின்றன.

# எங்கள் பிராந்தியப் பாதுகாப்புக்கு வெளிநாட்டுப்படைகள் தேவையில்லை

### ஈரான் அதிபர் தெரிவிப்பு

தெஹ்ரான்,ஓக.15
வளைகுடாப் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு வெளிநாட்டுப்படைகள் தேவையில்லை என்று ஈரான் அதிபர் ஹசன் ரவ்ஹானி தெரிவித்தார். ஈரானின் அரச ஊடகத்தில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பிராந்தியத்தின் பாதுகாப்பை ஈரான் மற்றும் பிற வளைகுடா நாடுகள்தான் காக்க வேண்டும். இதற்கு வெளி நாட்டுப் படைகள் தேவையில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**பின்னணி**
அணு ஆயுத ஒப்பந்தம் ஒன்று தொடர்பில் அமெரிக்கா-ஈரான்இடையேஏற்பட்டபிணக்கால் குறித்த இரண்டு நாடுகளுக்கும் இடையே முறுகல் நிலை நீடிக்கிறது. ஈரான் மீதுபொருளாதாரத்தடைகளைவிதித்துள்ளது அமெரிக்கா. குறித்த ஒப்பந்தத்தில் அங்கம் வகிக்கின்ற ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் சிலவும் ஈரான் மீது சில தடைகளை விதித்துள்ளன. அமெரிக்கா ஈரான் முறுகலுக்கிடையில் ஈரானின் எண்ணெய்க் கப்பல் ஒன்றை ஜிப்ரால்டர் கடற்பகுதியில் வைத்துப் பிரிட்டன் கைப்பற்றியது. தனது தடையை மீறிச் சிரியாவுக்கு எண்ணை கடத்தியதாகக் குற்றஞ் சாட்டியே அந்தக் கப்பலைப் பிரிட்டன் கைப்பற்றியது. பின்னர் பிரிட்டனுக்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல் ஒன்றைக் ஹோர்மோஸ் நீரிணைப்புப்பகுதியில்வைத்துஈரான்கைப்பற்றியது. உலகின் முக்கிய வர்த்தகப்பாதையான ஹோர்மோஸ் நீரிணைப் பகுதியை ஈரான் ஆக்கிரமிப்புச் செய்வதாகத் தெரிவித்துப் பன்னாட்டுக் கடற்படைக் கூட்டணி ஒன்றை அங்கு நிறுவுவதற்கு ட்ரம்ப் நிர்வாகம் நட்பு நாடுகளை நாடியது. அத்தோடு வளைகுடாப்பகுதியில்தனதுகடற்படையை நிறுத்தியது. ஈரான் மீது அமெரிக்கா அதிக அழுத்தத்தை அளித்து வரும் நிலையில் அதன் பிராந்தியத்தில் தனது படையையும் அதிகரித்துவருகிறது. இதனால், வளைகுடாப் பகுதியில்பதற்றம்நிலவுகிறது. இந்தநிலையிலேயே வளைகுடாப் பிராந்தியப் பாதுகாப்புக்குவெளிநாட்டுப்படைகள்தேவையில்லை என்று தெரிவித்துள்ளார் ஈரானின் அதிபர்.



# மனித உரிமையாளர்கள் சமூக ஆர்வலர்கள் உயிருக்கு அச்சுறுத்தல்

### வைகோ கண்டனம்

தமிழ்நாட்டில் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக, ம.தி.மு.க. பொதுச்செயலர்வைகோ கண்டனம் தெரிவித்தார்.
கடந்தமூன்றுஆண்டுகளில்தமிழகத்தில் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு, மணல் கொள்ளை, மது, சாதி வன்மம் ஆகியவற்றுக்கு எதிராக போராடி வந்த மனித உரிமைஆர்வலர்கள்38பேர்படுகொலை செய்யப்பட்டிருப்பது கடும் அதிர்ச்சி அளிக்கிறது.
தமிழ்நாட்டில்சமூக ஆர்வலர்கள், மனித உரிமைப் போராளிகள் தமிழக அரசின் அடக்குமுறைக்குஉள்ளாவதுதொடர்ந்து கொண்டு இருக்கின்றது. இது கண்டனத்துக்குரியது - என்று வைகோ மேலும் குறிப்பிட்டார்.

# குட்டி யானைகளுடன் 19இல் சஜித் சந்திப்பு

கொழும்பு, ஓக. 15
ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸசவுக்கும், அந்தக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெறவிருந்த சந்திப்பு எதிர்வரும் 19ஆம் திகதிவரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

இதற்கான காரணம் அறிவிக்கப்படவில்லை. எனினும், 19ஆம் திகதி ஐ.தே.கவின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது என்றும், அந்தக் கூட்டத்தின் பின்னர் மேற்படி சந்திப்பு இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.தே.கவின் அரச தலைவர் வேட்பாளர், புதிய அரசியல் கூட்டணி உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-22)

# வல்வெட்டித்துறையில் ஒருவரை காணவில்லை என முறைப்பாடு!

வடமராட்சி, ஓக. 15
வல்வெட்டித்துறையில் நபரொருவரைக் காணவில்லை என பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை நெடியகாடு எனும் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணதாஸ் இளங்கோ (வயது -34) என்பவரையே காணவில்லை என்று முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை தீர்த்தக்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் அவர் இறுதியாக இனங்காணப்பட்டுள்ளார். அதன் பின்னர் அவரைக் காணவில்லை என்று அந்த முறைப்பாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. (ம-26)






சீனாவின் தன்னாட்சிப் பிரதேசமான ஹொங்கொங்கின் சிறைக் கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்தும் தீர்மானத்தை ஹொங்கொங் அரசு அண்மையில் மேற்கொண்டது. இதை எதிர்த்து ஹொங்கொங் மக்கள் பல்லாயிரக் கணக்கானோர் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஹொங்கொங் வானூர்தி நிலையத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டமொன்றின்போது போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் பல பொதுமக்களின் கண்கள் காயமடைந்தன. இவற்றுக்குக் கண்டனம் தெரிவித்தும் தற்போது அங்கு போராட்டம் உச்சம் தொட்டுள்ளது. (ம)

## என்னகுற்றம்...

கண்டியில் நேற்று இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட கோத்தபாய, மக்கள் சந்திப்புக்களிலும் கலந்துகொண்டார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் அரச தலைவர் வேட்பாளர் நானே. எனக்கு மாற்றீடாக எமது கட்சியிலிருந்து எவரும் களமிறங்கமாட்டார்கள். வீண் வதந்திகளை எவரும் நம்பவே வேண்டாம். வடக்கு - கிழக்கு - மலையகம் என நாடெங்கிலும் பரந்து வாழும் தமிழ்பேசும் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எமது ஆட்சியில் தீர்வைப் பெற்றுக்கொடுப்பேன்.

என்னைத் தமிழ்பேசும் மக்களின் எதிரியாகச் சித்தரித்துக்காட்ட அரசியல்வாதிகள் சிலர் முயற்சிக்கின்றார்கள். தமிழ்ப் பயங்கரவாதிகளின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டை மீட்டெடுத்தது ராஜபக்ச குடும்பம். இப்படிப்பட்ட ராஜபக்ச குடும்பத்தினரை குற்றவாளிகள் என்று குறித்த அரசியல்வாதிகள் கண்டபடி விமர்சிக்கின்றார்கள். நாம் உண்மையில் என்ன குற்றம் செய்தோம்? எம்மை விமர்சிப்பதை உடன் நிறுத்துமாறு குறித்த அரசியல்வாதிகளிடம் வேண்டிக்கொள்கின்றேன்.

எந்தத் தடைகள் வந்தாலும், அதனைத் தகர்த்தெறிந்து அரச தலைவர் தேர்தலில் நான் வெல்வது உறுதி. இந்த நாட்டில் வாழும் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பாதுகாவலனாக, நல்லதொரு தலைவனாக நான் இருப்பேன்' - என்றார். (ம-22)

## எத்தனை...

'பெரிய குற்றச்சாட்டுக்களைத் சுமந்து நிற்கும் கோத்தபாயவை வெட்கம் இல்லாமல் அரச தலைவர் வேட்பாளராக மகிந்த களமிறக்கியுள்ளார். அரச தலைவர் வேட்பாளராகப் போட்டியிட ராஜபக்ச குடும்பத்தில் எவருக்கும் தகுதியில்லை. அந்த முழுக்குடும்பம் மீதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான சர்வாதிகார ஆட்சியில்தான் மேற்படிக் குற்றங்களை ராஜபக்ச குடும்பம் புரிந்துள்ளது.

எனவே, கடந்த தடவை நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்தது போல் இம்முறை நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் அவரின் சகோதரர் கோத்தபாய ராஜபக்சவும் தோல்வியடைவார் என்பது உறுதி. வெற்றிவாகை சூடப்போகின்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் யார் என்று விரைவில் அறிவிக்கப்படும் - என்றார். (ம-22)

## தூக்கில்...

அருகில் சாரமும் 'சேட்டும்' சாராயப் போத்தலும் மீட்கப்பட்டுள்ளன. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-159,131,9)

## கடந்த...

வவுனியா வைத்தியசாலையில் சுகாதார அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டில் மாகாண சபையால் முன்னெடுக்கப்பட்டிருந்த விபத்துக்கள் மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவைத் திறந்து வைக்கும் நிகழ்விலும் நெதர்லாந்து அரசின் நிதி உதவியோடு அமைக்கப்படவுள்ள இருதய மற்றும் சிறுநீரக சிகிச்சை பிரிவுக்கான அடிக்கல் நடும் நிகழ்விலும் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசு தார் வீதிகளையும் பட்டுப்பாதை வீதிகளையும் அமைத்திருந்ததே தவிர, மக்களுக்கான பொருளாதார ரீதியான அபிவிருத்தியை ஏற்படுத்தவில்லை. நாம் வடபகுதி மக்களுடையதும் நாட்டு மக்களுடையதுமான பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் திட்டத்தை முன்னெடுத்துள்ளோம். நாம் வன்னி பிரதேசத்தை இரண்டாம் தரமாகப் பார்ப்பதில்லை. யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு எவ்வாறான அபிவிருத்யை ஏற்படுத்துகின்றோமோ அதேபோன்று வன்னி பிரதேசத்திலும் அபிவிருத்தியை மேற்கொண்டு வருகிறோம்.

வவுனியாவைப் பொறுத்தவரை பொருளாதார மத்திய நிலையம், செட்டிகுளத்தில் தண்ணீர் விநியோகத் திட்டம், வீட்டுத்திட்டங்கள், சுகாதார வசதி மேம்படுத்தல், ஐ றோட் போன்ற திட்டங்கள் இந்த அரசின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டன.

நாம் எதிர்வரும் காலங்களில் வன்னி பிரதேசத்து இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. இந்த வேலைத் திட்டமானது தொழிற்சாலைகளை மாத்திரம் அமைத்து வேலைகளை வழங்குவதாக இருத்தல்கூடாது. தென்பகுதி மக்களுடைய நெல் மற்றும் பல்வேறு உணவு பொருள்கள் வடபகுதியில் இருந்தே வருகின்றன. ஆகவே இந்த உற்பத்தியை நவீன தொழில் நுட்பத்தின் ஊடாக எவ்வாறு உயர்த்த முடியும்என்பது தொடர்பில் சிந்தித்து திட்டங்களை உருவாக்க வேண்டும்.

ஆகவே இவ்வாறான திட்டங்களை முன்னெடுப்பதற்கு மக்கள் சரியான தீர்மானங்களையும் எடுக்க வேண்டும் மீண்டும் எமக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற போதே இவற்றைச் செயற்படுத்த முடியும். இதே வேளை - நெதர்லாந்து அரசிடம் இருந்து நிதியைப் பெறுவதற்கு முனைப்புடன் செயற்பட்ட முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்துக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார். (ம-110)

## கட்டுத்துவக்கு...

கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். முத்தையா விஜயன் (வயது -52) என்ற நபரே அவ்வாறு உயிரிழந்தவராவார்.

நீண்ட நேரமாகியும் தனது கணவன் வீடு வராததால் சந்தேகமடைந்த மனைவி அவரை பல இடங்களிலும் தேடியுள்ளார். இதன்போது அரசடிக்குளம் 4ஆம் வாய்க்கால் காட்டுப்பகுதியில் குறித்த நபர் சடலமாக மீட்கப்பட்டார். (ம-110)

## பெரும்பான்மை...

குள் ஆதரவுகள் வலுத்துள்ளன. ஐ.தே.கவின் செயற்குழுக் கூட்டத்தைக்கூட்டி வாக்கெடுப்பின் மூலம் வேட்பாளரைத் தெரிவுசெய்யுங்கள் என்று ஐ.தே.கவின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தமிழர்கள்...

தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களின் நிலங்களை ஓர் அங்குலமேனும் கையகப்படுத்த நாம் ஒருபோதும் நினைக்கவில்லை. அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை தமிழர்களுக்கு முழுமையாக வழங்க வேண்டும். காணி, பொலிஸ் அதிகாரங்கள் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்பதே எனது தனிப்பட்ட கருத்து - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## புதிய...

அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போது கூட்டணி விவகாரத்தைக் கையாள்வதற்கு உபகுழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் மனோ கணேசன்,

'செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அமைக்கப்பட்ட உபகுழு எதிர்வரும் சனிக்கிழமை கூடவுள்ளது. இதன்போது ஜனநாயக தேசிய முன்னணி என்ற கூட்டணி தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். இதன்போது இந்த கூட்டணியை நாட்டுக்கு அறிவிக்கும் திகதியும் நிர்ணயிக்கப்படும். நிர்ணயிக்கப்படும் தினத்தன்று, கூட்டணி ஆவணத்தில் பங்காளிக் கட்சித் தலைவர்கள் கையெழுத்திடுவதும், கூட்டணி அரச தலைவர் வேட்பாளர் பெயர் அறிவிப்பும் ஒருசேர நடைபெறும் - என்றார். (ம-22)

## காணாமல்...

உள்ளவீதி அபிவிருத்தித்திணைக்களத்துக்கு முன்பாக சுழற்சி முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கட்டடத் திறப்பு விழா நிகழ்வுக்குச் சென்ற தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திப்பதற்கும் அவருக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் முயற்சிகளை எடுத்திருந்தனர். இதையடுத்தே மாற்று வழியால் ரணில் கட்டடத்துக்குச் சென்றார். இதையடுத்து அவர்கள் ரணிலுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ம-7,110)

## கோத்தாவின்...

செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமையளிக்கக் கூடிய ஒருவரை ஐக்கிய தேசியக் கட்சி தனது அரச தலைவர் வேட்பாளராகத் தெரிவுசெய்ய வேண்டும். என்னிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தால், ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளேன்.

அரச தலைவர் வேட்பாளர் தெரிவு விடயத்தில் கட்சியின் முடிவுக்குக் கட்டுப்படுவேன். எனினும், பொருத்தமற்ற ஒருவர் வேட்பாளராகப் பரிந்துரைக்கப்பட்டால், அதை ஏற்று அவருக்குப் பரப்புரை செய்ய மனம் இடம்கொடுக்காது - என்று பொன்சேகா மேலும் தெரிவித்தார். (ம)

# ஓல்ட் கோல்ட்ஸ் வெற்றி பெற்றது



யாழ்ப்பாணம், ஓக. 15
ஏபி பவுண்டேசன் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணி வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து விக்டோரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோரி அணி 15.3 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 92 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பத்மபிரியன் 32 ஓட்டங்களையும, திரேசன் 24 ஓட்டங்களையும், டானியல் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் திலீபன் 3 இலக்குகளையும், சிந்துயன், பிரியங்கன் இருவரும் தலா 2 இலக்குகளையும் பெற்றனர்.

93 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குக் களமிறங்கிய ஓல்ட் கோல்ட்ஸ் அணியினர் ஓர் இலக்கை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர். மதுசன் 47 ஓட்டங்களையும், மாதவன் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

(ம-23)

## நான்காவது இடத்தில் ஸ்ரேயாஸ் வேண்டும்!

### கவாஸ்கர் வலியுறுத்தல்

இந்திய அணியில் நான்காவது இடத்துக்கு ஸ்ரேயாஸ் களமிறக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர்.

இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையைப் பொறுத்த வரையில் நான்காவது வீரராக எவரை இறக்குவது என்பது தொடரில் பெரும் குழப்பம் நீடிக்கிறது. இந்தக் குழப்பமே இந்தியாவிடம் இருந்து உலகக் கிண்ணம் பறிபோனமைக்கு முக்கிய காரணம் என்று கருதப்படும் நிலையில் இவ்வாறு வலியுறுத்தினார் ஸ்ரேயாஸ்.

'ஒருநாள் போட்டியில் டோனியைபோல் ரிசப் பன்ட் ஐந்தாவது அல்லது ஆறாவது இடத்தில் களமிறங்கப் பொருத்தமானவர். அதிரடி ஆட்டக்காரரான அவருக்கு அந்த வரிசையில் ஆட்டத்தை வெற்றிகரமாக முடிக்க நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நான்காவது இடத்துக்கு நிரந்தரத் தீர்வாக ஸ்ரேயாஸைப் பயன்படுத்த வேண்டும். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் ஸ்ரேயாஸ் நான்காவது வீரராகக் களமிறங்கத் தகுதியானவர் என்ற பாடத்தைத் தருகிறது - என்று கவாஸ்கர் மேலும் தெரிவித்தார்.

(ம)



## கலைமகள் வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 15
அரியாலை சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் அரியாலை சிறி கலைமகள் சனசமூக நிலைய அணி வெற்றிபெற்றது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை சிறி கலைமகள் சனசமூக நிலைய அணியை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறி கலைமகள் சனசமூக நிலைய அணி 8 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. நிரோசன் 42 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றார்.

பதிலுக்குக் களமிறங்கிய பொற்பதி அணி 54 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து தோல்வியடைந்தது.

(ம-23)

## சென்றலைட்ஸ் அணி இலகுவாக வென்றது!



யாழ்ப்பாணம், ஓக. 15
ஏபி பவுண்டேசன் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் அணி வெற்றி பெற்றது.

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. நிசான் அதிகபட்சமாக 42 ஓட்டங்களைப் பெற்றார். டார்வின் 38 ஓட்டங்களையும், நிரோசன் 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிறிகுகன் 3 இலக்குகளையும், நிரோசன் 2 இலக்குகளையும், பிரியலக்சன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

156 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ட்ஸ் அணி 113 ஓட்டங்களை மட்டும் பெற்றது. பிரியலக்சன் அதிகபட்சமாக 46 ஓட்டங்களைப் பெற்றார்.

(ம-23)

## கலையொளி வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 15
அரியாலை சனசமூக நிலையத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றில் கலையொளி அணி வெற்றி பெற்றது.

இணுவில் கலையொளி விளையாட்டுக் கழக அணிக்கும், சுன்னாகம் வொரியர்ஸ்விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இணுவில் கலையொளி அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக நிரோசன் 34 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தடிய சுன்னாகம் வொரியர்ஸ் அணி 8 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.

(ம-23)

## முன்னாள் கால்பந்து வீரர் ஜோஸ் லூயிஸ் உயிரிழப்பு



ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் கால்பந்தாட்ட வீரர் ஜோஸ் லூயிஸ் பிரவுண் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். அவருக்கு வயது 62.

1986ஆம் ஆண்டில் உலகக்கிண்ணம் வென்ற ஆர்ஜென்ரீனா அணியில் இவரும் இடம்பெற்றிருந்தார். இறுதியாட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணிக்காக கோலொன்றையும் பதிவுசெய்தார். ஆர்ஜென்ரீனா இளநிலை கால்பந்தாட்ட அணியின் பயிற்சியாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

(ம)

# தனஞ்சய என்னும் ரங்கன கேரத் ரெய்லர் என்னும் விடாப்போராளி

**நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் சுழல் பந்து வீச்சாளர் அகில தனஞ்சய 5 இலக்குகளைச் சாய்த்தார். இலங்கை அணியின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளர் ரங்கன கேரத்தின் பந்துவீச்சையும், அவரின் முறைமைகளையும் ஒத்ததாக தனஞ்சயவின் நேற்றைய ஆட்டம் அமைந்தது.**






நியூசிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் காலியில் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. காலி ஆடுகளத்தில் நான்காவதாகத் துடுப்பெடுத்தாடுவதென்பது ஒரு கெட்ட கனவே. இதனால் நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சனின் முடிவு முழுவதும் சரியானது. அதுவே வரலாறும்.

நியூசிலாந்து அணியின் ஆரம்ப வீரர்களாக ராவல் மற்றும் லாதம். இருவரும் நிதானமாக இன்னிங்ஸை ஆரம்பித்தனர். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களை எட்டியது நியூசிலாந்து அணி. அணி 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லாதம்.



களமிறங்கினார் வில்லியம்சன். உலகக்கிண்ணத் தொடர் நாயகனான அவரின் டெஸ்ட் இன்னிங்ஸ் மீது பெரும் எதிர்பார்ப்பு நிலவிய போதிலும் தனஞ்சயவின் சுழலில் வெறும் இரண்டு பந்துகள் மட்டுமே அவரால் தாக்குப்பிடிக்க இயன்றது. மூன்றாவது பந்துவீச்சில் அவர் பவிலியனில். ராவல் 33 ஓட்டங்களுடன் டி சில்வாவிடம் பிடிகொடுக்க நியூசிலாந்து திடீர்ச் சரிவு கண்டது.

**திருப்பு முனை**

அனுபவ வீரர் ரெய்லர், நிக்கொல்ஸுடன் இணைந்து சரிவைச் சரிசெய்தார். படிப்படியாக நியூசிலாந்தின் ஓட்டங்கள் அதிகரிக்கத் தொடங்கின. அரைச்சதம் கடந்தார் ரெய்லர். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டன. நிக்கொல்ஸை 42 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் தனஞ்சய. வற்லிங் வந்த வேகத்தில் சென்றார். ரெய்லர், சான்நெர் ஓரளவு தாக்குப்பிடித்தனர். மழை குறுக்கிட்டதை அடுத்து 68 பந்துப் பரிமாற்றங்கள் வீசப்பட்ட நிலையில் நாள் முடிவுக்கு வந்தது. நியூசிலாந்து அணி தற்போது 5 இலக்குகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ரெய்லர் 86 ஓட்டங்களுடனும், சான்நெர் 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். வீழ்த்தப்பட்ட ஐந்து இலக்குகளையும் தனஞ்சயவே கைப்பற்றினார். (ம)

# சென்றலைட்ஸ் சம்பியனானது




யாழ்ப்பாணம், ஓக. 15

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 100ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் சென்றலைட்ஸ் அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஏபி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் 9 இலக்குகளை இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கௌதமன் 34 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பார்தீபன் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

98 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஏபி 91 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதையடுத்து 6 ஓட்டங்களால் வெற்றிபெற்றது சென்றலைட்ஸ். பந்துவீச்சில் ஜெரிக் துசாந், ஜேம்ஸ் ஜான்சன் இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சென்றலைட்ஸ் அணியின் கௌதமன் தெரிவானார். தொடராட்ட நாயகனாக அதே அணியின் ஜெரிக் துசாந் தெரிவானார். (ம-23)

# பயிற்சியாளராக மீண்டும் சாஸ்திரி

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளராக மீண்டும் ரவிசாஸ்திரி நியமிக்கப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்திய அணியின் பயிற்சியாளர் தெரிவை முன்னெடுத்துவரும் அந்த அணியின் முன்னாள் தலைவர் கபில்தேவ் தலைமையிலான குழுவினர் ஆறு பேர் கொண்ட பட்டியலை வெளியிட்டுள்ளனர். இடம்பெற்றுள்ள ஆறு பேரில் ரவி சாஸ்திரியும் ஒருவர். அவரைவிட இந்திய அணியின் முன்னாள் வீரர் ரொபின்சிங், இந்திய அணியின் முன்னாள் மேலாளர் லால்சந்த் ராஜ்புத் ஆகிய இரு இந்தியர்களும், நியூசிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் மைக் ஹசன், இலங்கை அணியின் முன்னாள் பயிற்சியாளர் டாம் மூடி (ஆஸ்திரேலியா), ஆப்கானிஸ்தான் அணியின் முன்னாள் பயிற்சியாளர் பில் சிம்மன்ஸ் (மே.இ.தீவுகள்) ஆகிய மூன்று வெளிநாட்டினரும் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் ரவிசாஸ்திரிக்கே அதிக வாய்ப்பு உள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

## சிறுநீரகம் தேவை

O+ இரத்த வகையைச் சேர்ந்த 30 வயதுடைய ஆண் ஒருவருக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப்படுகின்றது.

077 413 8877, 077 971 1498

## வேலையாள் தேவை

திருநெல்வேலியில் இயங்கும் Phone Shop இற்கு வேலையாள் தேவை. (ஆண், பெண்)
நேரில்வரவும்

077 115 3412

## கார் விற்பனைக்கு

பல்கலைக்கழக ஊழியரின் பாவனையில் உள்ள
- Maruti Suzuki Zen estilo, 2010,
- Dusky Brown - 998 CC
  20,000 km Show room Condition

விலை பேசித் தீர்மானிக்கப்படும் (தரகர் தேவையில்லை)

077 657 9745

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு சகல வேலைகளும் தெரிந்த சமையலாளர் மற்றும் பரிமாறுபவர் (வெயிற்றர்) தேவை.

தொடர்புகட்கு:- 077 545 6420

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம். றில்கோ ஹொட்டலில் 10.08.2019 அன்று நல்லூர் றொட்டறி கிளப்பினால் நிகழ்த்தப்பட்ட நிகழ்வில் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**தேசகீர்த்தி கலாநிதி**

**இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் சமூக சேவையினைப் பாராட்டி றொட்டறி கிளப்
**District Governor Elect Rtn. Ajith Weerasinghe**
அவர்களிடமிருந்து

**"மனித நேயர்"**


என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை மனதாரப் பாராட்டுகின்றோம்.

**உரிமையாளரும், ஊழியர்களும்**
ஐங்கரன் களஞ்சியம்
6, பலாலி வீதி, திருநெல்வேலி.

(CS 27374) (14.17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கண் மகிழ 16 . 10 . 1938

கண் நெகிழ 16 . 07 . 2019

### செல்லத்தம்பி சரவணமுத்து
### (அர்சுனன்)

எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு எமக்குப் பல வழிகளிலும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டோருக்கும், தொலைதூரங்களிலிருந்து அன்னாரைத் தேடிவந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (15.08.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து T.C.T மண்டபத்தில் (சொர்ணாம்பிகை மண்டபம்) நண்பகல் 12.00 மணிக்கு மதியபோசனம் நடைபெறும்.

**அழைப்புக்கள் தவறவிடப்பட்டிருப்பின் இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அனைவரும் வருகை தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

(CS 27377)(14.17)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

# கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்

**(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதவான்)**



சாவகச்சேரி, சப்பச்சிமாவடியைப்பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு பத்திர காளி கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் 12.08.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சின்னப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் மகேஸ்வரி யின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற நகுலேஸ்வரன் மற்றும் சுதர்சினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மஞ்சுளா மற்றும் சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாம னாரும் பிரபாங்கன், பிரியங்கா, பவித்திரா, பிருந்தா (ஜேர்மனி), பைரவி, நர்த்தனன், ஜனதன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் பாக்கியலீலா (பிரான்ஸ்), தங்கராசா காலஞ்சென்ற குணராசா மற்றும் விஜயராசா (கனடா), ரதி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற இராசலிங்கத்தின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (16.08.2019) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்தானை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்: குடும்பத்தினர்
021 221 3785

(J10457/15/17)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.